கலா சிந்தாமணி

புத்தகம் ௬ 6 | "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" —திருக்குறள். | பகுதி ௭ 7

திருமுருகாற்றுப்படை.

[௩.—*திருவாவினன்குடி]

(162-ம் பக்கத் தொடர்ச்சி.)

புலவர்பெருமானான நக்கீரர் தாமியற்றிய திருமுருகாற்றுப் படையில் மூன்றாவதான திருவாவினன் குடியில் கோயில்கொண் டமர்ந்தருளும் முருகப்பெருமான் திருவருட்டிறத்தைப் புகழ்ந்து. அக்கடவுள் திருவருள் பெறுவான் வந்த ஓர் இரவலற்குக் கூறுகிறார் :—

இப்படை வீட்டில் நான்முகப் பிரமற்கு ஆறுமுகப் பெருமானால் உண்டாய சாபத்தால் அந்நான்முகன் தான் படைத்தற்றொழிலைச் செய்யாது தவிரவே, எஞ்சிய அரியும் அரனும் ஆகிய இவர்கட்குக் காத்தற்றொழிலும், அழித்தற்றொழிலும் செய்தற்கு இல்லையாகையால் இம்முத்தொழில்களையும் ஒரு தனி முருகக்கடவுளே நடாத்திவர; அயன், அரி, அரன் ஆகிய இம் மூர்த்திகளும் தத்தமக்குரிய தொழில்களை பழமைபோல்நிகழ்த்தித் தலைவர்களாகவேண்டி ஆவினன்குடியில் தண்ணருட் கற்பினையுடைய தெய்வயானை யம்மையாருடன் வீற்றிருந்தருளும் முருகக் கடவுளின் அருள்பெறவேண்டி கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய நல்லறிவினையுடைய முனிவரர்கள் முன்னர் செல்லவும்; பின்னர் நல்லிசையாழ் இசைக்கவல்ல கந்தர்வ மகளிரொடு காந்தர்வர்களும், நீள் கருடக் கொடியுடையோனான திருக்கிளர் செல்வனும், ரிஷபக் கொடியுடையோனான முக்கண்மூர்த்தியும், நூறு வேள்வியியற்றிய ஆயிரங் கண்ணுடையோனும், 33 வரும், 18 கணங்களும் மற்றும் பலதேவர்களும், ஒருங்கு சேர்ந்து பல்லியங்கள் ஒலிக்க நட்சத்திரக் கூட்டங்கள்போல் ஆகாயத்தின் வழியேசென்று சித்தன்வாழ்வாம் ஆவினன்குடியில் ஆறுமாமுகனைக்கண்டு தங்கடங்கள் குறையிரந்து வேண்ட நான்முகப் பிரமற்கு இட்ட சாபத்தைப் போக்கி அயன் பழமைபோல் படைத்தற்றொழிலை நடாத்தத் திருவருள் பெற்றுய்ந்தான் என்பதாம்.

அயன், அரி, அரன் ஆகிய பலர் புகழ் இம்மூவரும் பண்டுபோல் தலைவராகப் படைத்தற்றொழிற்கு அயனால் குறைவு உண்டாயதால் அரி, அரன் ஆகிய இவர்கள் தொழிலும் நிகழாமையால் அயற்கு உண்டாய குறையைப் போக்க இம் முப்பெருந் தெய்வங்களும் செல்கையில் முனிவர்கள் செல்லுதல்:—

முனிவர்களின் ஆடை முதலியன:—கானகத்தூடே இருந்து அருந்தவமியற்றுந் தன்மையராகையால் மரவுரியை உடையாகச்செய்த உடையினைத்தாங்கள்

உடுக்கும் உடையாக உடையவர்களாயும், எக்காலத்தும் தவருது முறைப்படியே நீராடுதலினுல் அழுக்கற விளங்குகின்ற அழகொடு ஒளி செய்கின்ற திருமேனியை உடையவராயும், வெண்மையான வலம்புரிச் சங்கினை ஒத்த வெள்ளிய நரைத்த சுத்தமான மயிரினை முடியாகக் கட்டியுள்ளவராயும், கிருட்டிணசனம் எனும் மான்தோலினுல் ஆக்கப்பட்ட போர்வையினை உடையவராயும், பலவாருன விரதங்களைத் தாங்கள் மெய்ந்நூல்களில் விதித்தபடி பட்டினியாய் இருத்தலால் தங்கள் மேனியின் மீதுள்ள தசைகள் கெட்டு மார்பில் உள்ள எலும்புகள் கோவையாகத் தோன்றும்மேனியினராய்க் கானகத்தே உலவும் தன்மையுடையவராயும், எப்பொருளும் உண்பதற்கு நன்ருகிய பகற்பொழுதுகளைப் பல சேரக்கழித்து, மாதம் ஒரு முறையே உண்ணும் உணவினைக் கொள்பவராயும், நெடுங்காலம் மாறுபாட்டோடே நிற்கும் பகைமையைப் போக்கின நல்லமனத்தினை உடையவராயும், முற்றுங்குறைவின்றிக் கற்று வல்லுநரும் பன்னூற்களையும் முறையே தேர்ந்து கற்ருேர்களும் சிறிதும் அறியப்படாத தெய்வீகமாகவும், இயல்பாகவும் அமைந்த மூதறிவினை உடையவராயும், பலவற்றையுங் கற்ருேர்க்குத் தாமே எல்லையாகிய தலைமையை உடையவராகையால் கல்வியைக் கரை கண்டவராயும், மண், பெண், பொன் இவைகள்மீது கொண்ட ஆசையை அறப் போக்கியதால் தெளிந்த பேரறிவினை யுடையவராயும், கோபத்திற்குப் பின்னுகச் சிறிது போது மனத்தே நிற்கும் சினத்தையும், நெடுங்காலம் நிற்கும் செற்றத்தையும் கடிந்த காட்சியையுடையவராயும், அவர்கள் பன்னெடுநாள் பட்டினியிருந்து கொடிய தவங்களைச் செய்வதால் தங்கள் மெய்க்கு உண்டாம் வருத்தங்கள் பல உண்டெனினும் அவர்கள் தம் மனத்துவரும் சிறிதும் அறியப்படாத இயல்பினை உடையவராயும், தாங்கள் கொண்டுள்ள உள்ளக் கருத்தினைக் குறைவின்றி முடித்தற்கு ஐம்பொறிகளையும் ஒரு வழிப்படுத்தும் திருஉள்ளம் உடையவராயும், ஒருவருடனும் எவ்வகை வெறுப்புமில்லாத நல்ல அறிவினை உடையவராய்; ஆறுமுகப் பெருமான் திருவருள் பெற்று "நமக்குமாராய" எனும் திருநாமத்தை ஓர் இமைப்போதும் விடுக்காது ஓதும் நெறி உடையாராகையால் பிள்ளையாரிட்ட சாபத்தால் மண்ணிடைத் தோன்றி மயக்கமுற்ற அயன் தான் படைத்தற்ருெழிலை மீளவும் பிள்ளையாரிடத்துத்திருவருள் செய்ய ஆவினன் குடிக்குச் சென்று ஆறுமுகன்கொண்ட மாருக் கோபத்தைத் தணித்தருள் செய முனிவரர்கள் திரு ஆவினன் குடிக்கு முன்னர் சென்ருர்கள்.

முனிவரர் பின்னர் சென்ற காந்தர்வர், காந்தர்வ மகளிர்கள்:—காந்தர்வர்-இவர்கள் புகை நிறம் நிறைந்த மங்கலானதாயிருந்தாலும் தெய்வத்தன்மையால் அழுக்கேருத உயர்ந்த குணமுடைய உடையை உடையவர்களாயும், நறுமணங்கொண்ட மொக்குகளின் குவிழ்ந்த இதழ்கள் நெகிழவேண்டிய காலத்தே நெகிழ்ந்த மலர்களால் ஆக்கப்பட்ட மலர்மாலைகள் அடர்ந்து சூழ்ந்த அழகிய மார்பினை உடையவர்களாயும், எஃகுவின் செவியினுலே சுருதியின் ஒலியை ஆராய்ந்து அளந்து உயர்ந்த நரம்பினுல் கட்டப்பட்ட சுற்றுதலுறும் வார்க் கட்டினையுடைய நன்னயமான ஒலியைத் தரவல்ல தங்கள் கையகத்தே கொண்ட யாழினிடத்து அருமந்த இசைஒலிகளைப் பொருந்தப்பாடும் பண்பினை யுடையவரும், எக்காலத்தும் எவ்விதத்திலும் வருத்த மென்பதை உணர்ந்தறியாத குளிர்ந்த நெஞ்சகத்திருந்த இனிமையான மெல்லிய குரலினுலே வார்த்தைகளைச் சொல்லுதலைப் பொருந்திய கந்தர்வர் தாம்கொண்ட யாழினிடத்து இனிய நரம்பை வாசித்துக்கொண்டு முனிபுங்கவர்களின் பின் வரிசையில் சென்றனர். இவர்கள் பின்னர் காந்தர்வ மகளிர்கள் உடன் சென்றனர்.

காந்தர்வ மகளிர் இயல்பு:—பெண்மக்களுக்குரிய நோய்கள் காந்தர்வ ஸ்திரி

களினிடத்து இல்லையாய் இயல்பாகவும், தெய்வீகமாகவும் நிருமித்துள்ள அழகினால் சிறந்த யாக்கையை உடையவர்களாயும், மாமரத்தின் ஒள்ளிய தளிரை ஒத்த பொன்னிறங்கொண்ட திருமேனியை உடையவராயும், உயர்ந்த பொன்னின் மாற்றறியுங் கல்லில், பொன் உரை விளங்குதல் போல் தங்கள் அழகிய மாந்தளிர் நிறத்தை ஒக்கும் மேனியில் ஒளி தங்கிய காந்தியைப் போன்ற தேமலை உடையவர்களாயும், பார்த்தற்கினிய ஒளி பொருந்திய பருமம் எனும் பதினெண் கோவையாகிய மேகலையணிந்தும், தாழவேண்டிய இடம் தாழ்ந்தும் உயரவேண்டிய இடம் உயர்ந்தும் உள்ள அல்குலையுடைய குற்றமற்ற காந்தருவ மகளிர்கள் தங்கள் கந்தர்வர்களுடன் யாதொரு குற்றமும் இல்லையாய் விளங்கிச் செல்வார்களாயினர்.

முனிவரர்களும் காந்தர்வர்களும் ஆவினன் குடிக்கு முன்னர் செல்ல பின்னர் பலர் புகழ் முப்பெருந் தேவர்களான அயன், அரி, அரன் இவர்கள் செல்வாராயினர்.

புள்ளணி நீள்கொடிச் செல்வனான திருமால்.

"கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சி
புள்ளணி நீள்கொடிச் செல்வனும்" [றைப்

என்று மூலத்தில் புகன்றவாறு, மன்னுயிரைக் கவர வல்ல கொடிய கடுவானது ஒடுங்கித் தங்குதலை உடைய உறையைப்போன்ற துணையினையுடைய மிடற்றினைக் கொண்டதும் வெண்மையான வளைந்த உருவினையுடைய காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்ன நான்கு ஆய பற்களையுடையதும்; தம்மிடற்றிடத்தே நஞ்சு தங்கியுளதால் மூச்சுவிட்டு உயிர்க்குந்தோறும் நெருப்பின் கொடிய காற்று வீசப்பெறுதல்போல உயிர்க்குந் தன்மையதும், பருத்து நீண்ட கொடிய உருவத்தினைக் கண்டார் அச்சங் கொளும்படியானதுமாய திண்ணிய வரியினையுடைய பாம்பைத் தன்னுயிர் இழக்கும்படி அடிக்கும் திறலினையுடையதும், பலவகையான வரியினையுடைய சிறகினைக் கொண்ட கருடனைத் தனது நீண்ட கொடியில் "துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனர்" என, மறங்கடிந்து அறங்காப்போனென கொடிய பாம்பைப் படும்படிபுடைக்கும வல்லமைத்தான கருடனைத் தன் ஊர்தியாகக் கொளாது தன் நீண்ட வெற்றிக்கொடியிடத்தே அணிந்துள்ளோனான திருமால் அயற்குற்ற சாபத்தை நீக்க ஆவினன்குடிக்குச் செல்வாராயினர்.

(தொடரும்)

கா. அ. நடேச செட்டியார்.

---

*நல்லம்பர் நல்லகுடி யுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரி யுடைத்து-நல்லர
[வப்
பாட்டுடைத்துச் சோமன்வழிவந்த பாண்டிய
னாட்டுடைத்து நல்ல தமிழ். [நின்

என ஔவையார் கூறியதனானுணர்க. சித்தன்—முருகக்கடவுள்; ஆயிரம் நாமத்துள் ஒன்று. முருகக்கடவுள் திருவருள் பெறுவான் வந்த முனிபுங்கவர்களும் தேவர்களும் உவந்து உறைந்ததலமானதால் "இல்லந்தோறும் மூன்றெரியுடைத்து" என்றார்

மூன்று எரி ஆவது—நாற்சதுரம், முச்சதுரம், வில்வடிவம் ஆன மூன்று வகையைக் கருதின ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என மூன்றுவிதப் பெயரிய எரியையுடைத்து. எனவே வேதியர்கள் அக்கினி காரியங்களில் வழுவாது இல்லறம் நடாத்துபவர் வாழ்பதி என்றார்.

அங்கமுறு சென்மத்து அலைவுறு வெந்நோய
[னைத்தும்
அங்கருணன் முன்னிமம் போல் ஆகுமே—
[யங்க†
திருவாவினன் குடியாச் சேர்முகத்தர் சேயாந்
திருவாவி னன் குடியாற் செப்பு.

என்றார் "கந்தபுராண வெண்பா" பாடிய வெண்பாப் புலியார்.

முன்னர் பிரமற்கு இட்ட சாபத்தை அயனேநேரிற் கண்டு தொழ சாபத்தைப் போக்கிப் பண்டுபோல் படைத்தற்றொழில் செய்த கருணைமூர்த்தி யாகையால் "ஆவினன் குடியானை" ஓர்கால் ஓதுங்கால் வெந்நோயனைத்தும் அருணன்முன் பனியைப்போல் மறைந்தொழியும்.

† அம் கதிர், உவா இனன்—சந்திரசூரியர்கள்—அங்கதிரு வாவினன்

ஈகை

(120-ம் பக்கத் தொடர்ச்சி)

'கோவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாவை வேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கையச் செங்கை யென்ன
மேவலரெம் ரென்றுமல் வெங்களந்தன்னில் நின்ற
காவலன் கண்ணன்கையும் பொழிந்தது கனகமாரி.''

என்ற செய்யுளிலே வில்லிபுத்தூரார், போர்க்களம் நாடிச் செல்லும் நண்பர் பகைவரென்னும் பேதமின்றி யார்க்குந் தானங் கொடுத்து மீளுதற்கு ஆட்கொண்டான் ஈகையை ஒப்புக் கூறியுள்ளார்.

கர்ணன் தன்னிடம் வந்து விரும்பிக் கேட்கும் பொருளை இல்லை யென்னாது கொடுக்கும் தயாள குணமுடையவரென்பது தெரிந்திட்ட விஷயம். இன்னும் இவருக்கு, 'கொடைக்குக் கர்ணன்'— என்னும் பெயரும் வழங்குகின்றது.

இப்புகழை துரியோதனன் அறிந்து நம்முடைய பொருளை தர்மம் செய்வதினால் அன்றோ, கர்ணனுக்கு இப்புகழ் கிடைத்தது என்றெண்ணி, இவனுடைய கியாதி எவ்வளவு தூரம் பரவியிருக்கின்ற தென்பதைச் சொல்வோர்க்குப் பொன் வழங்குவதாகச் சொன்னான். இதைக் கேட்ட ஸ்ரீகண்ணபிரான் பிராமண வேடம் தரித்து துரியோதனனிடம் சென்று தான் ஒரு வேள்வி செய்வதாகவும் அதற்கு நூறுவண்டி விறகு வேண்டு மென்றும், அதுவும் யாகம் தொடங்கும் நாளையில் கொடுத்தால்போதும் என்றுங்கேட்டார். அரவுயர்த்தோன் கொடுப்பதாக வாக்களித்தான். சிந்துரத்தின் மருப்பொசித்த செங்கண்மால்,' சில மாதங் கழித்த பின்பு ஒருமாதகாலம் விடாமழையை உண்டு பண்ணிவிட்டுத்தான் யாகம் செய்பவரைப்போல் காலத்தைக் குறித்து, அரவுயர்த்தோனிடம் வந்து நாளைய தினம் நீர் எனக்கு வாக்களித்த பிரகாரம், இன்று விறகு வேண்டுமென்று கேட்டார், அதற்கு 'கண்ணிலா அருளிலிதன் காதன் மைந்தன்' பிராமணர்களுக்கு எவ்வளவு கொடுப்பினும் வறுமை நீங்காது போவென்று வெருட்டி துவாரபாலகரை அழைத்து, இவரைப் பிடித்து வெளியே தள்ளு என்று சொன்னமாத்திரம், எம்பெருமான் வெளி வந்து கர்ணனிடம்சென்று யான் ஒரு பொருள்வேண்டி உன்னைநாடி வந்தனன் என்று தெரிவித்தார். அம்மொழியைச் சிரமேற்றாங்கி அடியேன்செய்த பூர்வபுண்ணியத்தால் இவ்விடம் எழுந்தருளிய காரணத்தை திருவாய் மலர்ந்தருளுவீராகில் தாம் வேண்டிவந்த பொருளைத்தரச்சித்தமாய் இருக்கிறேன் என்று கர்ணன் கூற, ஸ்ரீகண்ணபிரான், தான் நாடிவந்த செய்தியைத் தெரியப்படுத்தவே, அக்காலம்மழைக்காலமானதாலும், நாளை துவக்கபோகிற யாகத்திற்கு இன்றே விறகு வேண்டுமென்று கேட்டதாலும், தன்னுடைய சபாமண்டபத்தைப்பறித்து, வேதியர் கேட்ட பிரகாரம் நூற்றுக்கணக்கான வண்டிகளில் பாரமேற்றி இம் மறையோர் குறிக்கும் இடத்திற்குக் கொண்டு போக! என்று தன் காவலாளர்களுக்கு உத்திரவு கொடுத்தார்.

இன்னும் கர்ணனுடைய ஈகையைப் பற்றி வில்லிபுத்தூரர் பல மொழிந்துள்ளார். ஆனால் ஈகையென்பது தருமம் என்று ஏற்படும். ஆகவே விதிக்கப் பட்டவைகளைச் செய்தலும், விலக்கப் பட்டவற்றைச் செய்யா தொழித்தலுமாம். வைதீகமாயுள்ள ஈசுர வழிபாடும், லௌகீகமாயுள்ள நல்லொழுக்கமும் இவ்விதி விலக்கிலேயே யடங்கும். இனி விதிக்கப்பட்டவைகள் சற்கிரியை என்றும், விலக்கப் பட்டவைகள் துற்கிரியை என்றும், இவற்றால் நாம் பெறுவனமுறையே புண்ணியமென்றும் பாவமென்றும் பெரியோர் கூறுவர்

நாம் செய்யவேண்டியது விதிக்கப்பட்டவைகள், மநுமுதலிய நீதிநூற்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவை எண்ணிறந்தவாயினும், அவற்றுள் முக்கியமாகத் தெரிந்தெடுக்கப் பட்டவைகள் முப்பத்திரண்டு தர்மமாம். இவ்வளவு அறங்களும் ஒருவனால் செய்யச் சாத்தியப் படாவாகையால், மூவாயிரவருடம் சிவயோகத்திலிருந்து மூவாயிரம் திருமந்திரங்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமூல நாயனாரும்,

'யாவர்க்கு மாமிறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை
யாவர்க்குமா முண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே'

என்று சொல்லி அருளியபடி யாவராலும் எளிதில் செய்து முடிக்கக் கூடிய அறங்கள் நான்காகும். இன்னும் ஒருவனுக்கு ஈகை செய்தலின் மேற்பட்ட செல்வமுமில்லை, அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இன்னும் வீடுபேற்றையும், துறக்கம் முதலிய செல்வத்தையும் தருகின்றபடியால் உயிர்கட்கு ஈகையின் மிக்க செல்வம், இந்நில வுலகின்கண் வேறு யாதுளது?

இன்னும் விருப்பத்தோடுகூடிய ஈகையே ஈகையாகும்.

ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்:—என்றும் ஔவை பிராட்டியார் கூறிப் போந்தனர்.

ஈரமுடைமை ஈகையினறிப:—என்று முதுமொழிக்காஞ்சியில் கூறியுள்ளபடி ஒருவன் நெஞ்சின்கண் ஈரமுடையான் என்பதனை, அவன் பிறர்க்குக் கொடுக்கும் ஈகையினாலே அறியலாம். இன்னும் ஒருவனிடத்துக் கருணையுண்டென்பதற்கு அவனுடைய ஈகையே அறிகுறியாகும்.

"ஈதலிசைபடவாழ்த லதுவல்ல
தூதியமில்லை யுயிர்க்கு."

என்று நான்முகனார் வாயுறை வாழ்த்தில் மொழிந்துள்ளபடி, நாம் வறியார்க்கீய அதனாற் புகழுண்டாக வாழவேண்டும். அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை யாகலான் ஈதல் சிறந்ததாகும். இன்னும் மனிதர்களுக்கு ஈகையான் வருவதே யின்பமாகும்.

இந்நில உலகின்கண், மானிடராய்ப் பிறந்த நம்மனோர்க்கு ஈகையைப்போல புகழைத்தருவது வேறுயாதுளது? ஆகலான் நாம் ஒவ்வொருவரும், நம்மால் இயன்ற மட்டும், வறியோர்க்கீந்து, 'அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆநந்த பூர்த்தியாகி'—விளங்குகின்ற பரம்பொருளின் கிருபைக்குப் பாத்திர ராவோமாக!

"உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்
பார்க்கொன்றீ வார்மேனிற்கும் புகழ்"—
(குறள்)

C. P. வஜ்ஜிரவேலு.

திருக்குறள் நாடகம்

மயிலை சீனி. கோவிந்தராஜன் அவர்கள் எழுதியது

களவியல் (174-ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு அல்ல குறிப்பிட்ட தலைமகளுக்குத் தலைமகனைக் காணும்பொழுதைக் காட்டினும் காணாப்பொழுதே பெரிதாயிற்று. ஆகவே அவள் ஆற்றாமை வளர்ந்து வேறுபட்டு வாடினாள். அவ்வாட்டம் கண்ட அவள் அன்னை அம்பல் எடுத்தாள்—பழித்துப் பேசினாள். அயலாரும் அலர் எடுத்தார்—பழித்துத் தூற்றினார்.

அன்னை யேச்சையும் அயலார் தூற்றையும் கேட்டு, மனம் புண்ணாகிய தோழி, களவொழுக்கம் ஒழிந்து தலை

மகளை வரைந்துகொண்டு வாழும்படி, தலைமகனை வற்புறுத்தத் துணிந்தாள்—துணிந்து அவன் பலநாளும் வந்து பயி லும் பொழிலிடத்தே சென்று, அவனை எதிர்ப்பட்டு, வலங்கொண்டு சார்ந்து, முன்னே நின்று மொழிகின்றாள்.

தோழி:—“மன்ன ! என் தோழிக்கு—‘உங்கள் அன்பினாலே இன்று அம்பலே விளைந்தது.’ அம்பு போன்ற அம்பலே வளர்ந்தது! உங்கள் தலையளி—பேரன்பு—பலராலும் அறியப் பட்டு அலராயிற்று !—இது வரும் வரையும் நீங்கள் இவ்வொழுக்கம் ஒழுகினீர்களே ! ஐய ! இனியாவது அறம் அறிந்து இவளை வரைந்து கொண்டு வாழ்வீர்களா ?—ஏச்சும் பேச்சும் காது கசக்கின்றதே ! பொறுக்க முடிய இல்லையே !”

த-ன்:—“நங்காய்! உனக்குக் கசக்கின்ற அலரே எனக்கு இனிக்கின்றது!—ஆ ! என் அரிய உயிர் உன் தோழியை எய்தப் பெறாமல் எவ்வளவு வருந்துகின்றது ? இப்படி எய்தற்கரிய உன்தோழியை எளியளாக்கி இவ்வூர் அலர் எடுக்கின்றதே—தூற்றுகின்றதே ! என்ன மடமை! மடமையாயினும் எனக்கு நன்மையே.—இந்த அலரை அல்லவா என் உயிர் பற்றுக் கோடாகக் கொள்கின்றது ? கொண்டு, அவளைப் பெற்றதுபோல மகிழ்கின்றது ? மகிழ்ந்து, நிலை பெறுகின்றது?-அந்நிலைப்பேற்றை நானே அறிவேன். அயலார் அறியார். அவர் அறியாதிருப்பதும் என் பாக்கியம் தான் ! இதை—அவர் எடுக்கின்ற அலரே எனக்குப் பற்றுக் கோடாதலை—அந்த அயலார் அறிந்தால், தூற்றுதொழிவார். ஒழியவே, என் ஆருயிர் ஒழிந்துபோமே! 1141

—“நல்லாய்! எங்களை அலர் எடுக்கின்ற இவ்வூரை நீ அருவருக்காதே.—மலர் போன்ற கண்ணுள்—உன்தோழியை எதிர்ப்படுவதென்றால் எத்தனை இடையீடு ? எத்தனை அருமை ? ஐயோ ! இவ்வூர் அவள் அருமை அறிய இல்லை. அவளை எளியளாக்கி விட்டது! பழியும் தூற்றிற்று! தூற்றி எனக்குப் பற்றுக்கோட்டையும் தந்தது ! பேதாய் ! இவ்வளவு உதவி செய்த இவ்வூரை நீ வெறுக்கலாமா ? 1142

—“நங்காய் ! இந்த அலர் எனக்கு எளிதாகக் கிடைப்பதோ ? அல்ல.—எங்களுக்குக் கூட்டம் உண்டென்று இவ்வூர அறிந்துகொண்டதே ! ஆ ! இப படி அறிந்துகொண்டதே என் பாக்கியம் ! அறிநதுகொண்டு, உண்டாக்கிய அலரோ என் பெரும்பாக்கியம்! ‘எப்படி’ என்று கேட்கின்றாயோ ? அவ்வலரைக் கேட்டே என் மனம் இன்பத்தை உடையதாகின்றது. ஆமாம் ! உன் தோழியின் கூட்டத்தைப் பெறாதிருந்தே பெற்றாற்போல இன்பம் உடையதாகின்றது.—தோழி ! இவ்வலர் எனக்கு அருமையுடையது அல்லவா ? 1143

—“இதோ ! பார் ! இது, பின்னும் ஓர் உதவியைப் புரிகின்றது!—என் காமத்தை வற்றாமல் வளரச் செய்கின்றது.—இவ்வூரார் எடுக்கின்ற அலர் இல்லையானால் என் காமம் இப்படி அலருமா ?—மேன்மேலும் மிகுமா ? அல்லது இன்பம் பயக்குமா ? நங்காய் ! தன் தன்மை இழந்து தவ்வெனச் சுருங்கிவிடாதோ ? 1144

—“என் வேட்கை மிகுதியால் அலரும் எனக்கு இன்பம் செய்கின்றது ! ஆமாம்! யாவரும் வெறுத்து விலக்கும் அலரும் எனக்கு இன்பம் செய்கின்றது!—கள்ளைக் குடிப்போர்க்கு களிக்கும்தோறு தெல்லாம் கள் உண்டல் இனிதாகாதோ ? அதுபோல, இக்காமமும் அலராகும்போ தெல்லாம், ஆ! எனக்கு எவ்வளவு இனிதாகின்றது ! அந்த இன்பத்தை நீ அறிவாயா?—என் உயிர்க்குத் துணையும் ஆகி, அதை நிலைபெறச் செய்து, அதற்கு இன்பமும் விளைக்கின்றதே! என் காமத்தை மேன்மேலும் வளரச்செய்கின்றதே ! ஆ ! இவ்வளவு நன்மை செய்கின்ற அலரையும் நீ இகழ்ந்து கூறலாமா? ” 1144

இவ்வாறு, தனக்கு அலரே பற்றுக்கோடாகின்றது என்று தலைமகன் சொல்ல, அது கேட்ட தோழி, 'இவனை வேறொரு வகையால் வரைவு கடாவல்—மணந்துகொள்ளும்படி வற்புறுத்தல்—வேண்டும்' என்று எண்ணி, அவள் விடைபெற்று அன்று பெயர்கின்றாள்.

—நாள்.

9 வரைவு முடுக்கம் 2,

களம்:—குறிஞ்சியில் தலைமகள் சிறை
காலம்:—கூதிரில் ஒரு பகல். [யிடம,
கூத்தர்:—தலைமகள், தோழி

தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகுகின்ற காலத்திலே, ஒரு நாள், முதல் யாமத்திலே தாய் உறக்கம ஒழிந்திருந்து தலைமகளுக்கு அறிவும் ஆசாரமும் கற்பித்தாள்; தாய் உறங்கியபின் நாய்கள் உறங்காமல இரவுமுழுதும் குரைத்துக் கொண்டிருந்தன. மற்றொருநாள் இரண்டாம் யாமத்திலே ஊர்கொண்ட பெருவிழாநாளாய் உறக்கம் நீங்கிவிழித்திருந்தது; பின்னே ஊர் காப்போரும் இடங்காப்போரும் விளக்கொடு வெளி வந்து வீதியின் புறத்திலும் வீட்டின் புறத்திலும் சுற்றித் திரிந்தார்கள். வேறொருநாள் மூன்றும் யாமத்தின் தொடக்கத்திலேயே நிலாவந்து தோன்றிப் பகல்போலக் காய்ந்து விளங்கிற்று; பின்னும் கூகைகள் இடைவிடாமல் குழறியன. இன்னொரு நாள் நான்காம் யாமத்துத் தொடக்கத்திலே சேவற்கோழி கூவிற்று. இவ்வாறு பல இடையீடுகளும் பலநாளும் உண்டானபடியால் தலைமகனை எதிர்ப்படாமல தலைமகள் ஆற்றாளாயினாள். அவள் ஆற்றாமையும அதனாலே வந்த மேனி வேறுபாடும் கண்டு, அவள் இல்லத்தார் அவளை இற்செறித்தார்கள்—இல்லத்தை விட்டு வேறெங்கும் வெளியேசெல்லாமல் தடுத்தார்கள். தடுக்கவே, தலைமகள், இல்லைச் சார்ந்துள்ள ஓர் இளமரச் சோலையிலே போய்த் தோழியோடு பொழுதுபோக்கினள்.

இவள் இவ்வாறு இருக்க, தலைமகனும் தலைமகளைக் காணாமையால் ஆற்றானாகி, அவளைக் காணும் விருப்பமுடையனாய், அவள் விளையாடுகின்ற சோலையின் புறத்தே வந்து நின்றான். அவன் வருகை அறிந்த தலைமகள்—தனக்கு அலரால் வரும் நாணத்தையும், அவனைக் காணாமையால்வரும ஆற்றாமையையும், இவற்றால் வரும் அல்லலையும் எல்லாம்—தன் தோழிக்குச் சொல்லுவாள்போல அவனுக்குக் கேட்கும்படி சொல்லுகின்றாள்.

த-ள்:—"தோழி! இது என்ன புதுமை? என் காதலரை நான் ஒரு நாளே கண்டேன்! அந்த ஒருநாளைக்கே இவ்வளவு அலராகிவிட்டதே! இது திங்களைப் பாம்பு தீண்டினால் திசை முழுதும் அறிவதுபோல அல்லவா இருக்கின்றது? திங்களோ, மறைவில்லாத வானத்திலே இருக்கின்றது; மேலும் உயரத்திலே இருக்கின்றது! அதைப் பாம்பு தீண்டினால் உலகத்துள்ள பலரும் அறியக்கூடும். என் காதலரை நான் கண்டதும் அப்படிதானோ? ஆ! என் செய்கையை உலகம் எப்படி அறிந்துவிட்டது? கிடக்கட்டும்.—இவ்வொழுக்கம் இனி ஆகாது! என் காதலர் இந்த அலரை அறிவாரானால் உடனே என்னை மணந்துகொள்வார். ஆம்! விரைவில் மணந்துகொள்வார். ஆனால், அவர் அறிவது எப்படி? ஏடி! அவருக்கு யார் சொல்வது?"

1146

தோழி:—"அம்மா! எல்லாம் உன்னால் வந்ததுதானே? இவ்வளவும் நீயே செய்துகொண்டாய்! காதலரை இரண்டொரு நாள் காணாவிட்டால் என்ன? அவர் பிரிவைப் பொறுத்துக் கொள்ளக கூடாதா? நீ ஆற்றாமல் அழுதபடியால் அயலார் அறிந்தார்கள்; அலர் எடுத்தார்கள். அந்த அலரைக்கேட்டு நம் அன்னையும் சீறினாள். இனியாவது, ஆற்றி யிருப்பாயா?

த-ள்:—"என்னடி! உனக்கு ஒன்றும் தெரியவில்லை. இந்த அயலார் சொல்லும் அன்னை சொல்லுமா என்னுடைய காமநோயைக் குறைத்துவிடும்? ஒருகாலும் குறைக்காது. என் காமநோயாகிய பயிருக்குப்

பெண்கள் தூற்றும் பழியெல்லாம் எருவாகின்றது ! நம் தாய் கூறும் சொல்லெல்லாம் தண்ணீர் ஆகின்றது ! பயிரோ செழித்து வளர்கின்றது—காமம் மேன்மேலும் மிகுகின்றது ! ஏடி ! என் ஆற்றாமை சுருங்குதற்கு இவையோ காரணம் ? அது பெருந்தற் கல்லவோ இவை காரணம் !

—(தான் சொல்வதைத் தோழி தெரிந்துகொள்ள இல்லை என்று எண்ணி) "என்னடி ! இன்னும் உனக்குத் தெரிய இல்லையா ?—'அயலார் எடுக்கும் அலரைப் பற்றியாவது நீ ஆற்றியிருக்கவேண்டும்!' என்கின்றாய். அது தானே நீ சொல்வது? ஆம்! நீ சொல்வது எப்படி இருக்கின்றதென்றால், 'நெய்யைச் சொரிந்து நெருப்பை அவி' என்பதுபோல இருக்கின்றது! நெருப்பிலே நெய்யை விட்டால் அது முன்னையிலும் மூண்டெரியும் என்பதை மறந்துவிட்டாய். அவ்வளவே நீ செய்த பிழை ; அதிகம் இல்லை. அடி!" 1148

இவ்வாறு தலைமகளும் தோழியும் பேசக்கேட்ட தலைமகன், "அந்தோ ! என் காதலியின் இவ்வளவு துன்பத்திற்கும் நானே காரணம ஆனேன். இனி இவளை மனம் நோகவையாமல் மணங்கொள்ளவேண்டும்!" என்று எண்ணிப் பெயர்கின்றான்.

இவ்வாறு முன்னிலையாகவும் சிறைப்புறமாகவும்—நேரிலும் மறைவிலும்—வரைவு கடாவப்பட்ட தலைமகன், உடன்போக்கு, ஒருவழித் தணதகல், வரைபொருட் பிரிதல் என்னும் இம்மூன்றினுள் ஒன்று செய்து, பின்பு தலைமகளை மணந்து கொள்வார்.

—நாள்.

10. உடன்போக்கு.

களம்:—குறிஞ்சியில் ஒரு பொழில்.
காலம்:—கூதிரில ஒரு மாலை.
கூத்தர்:—தலைமகன், தோழி.

தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகுகின்றபொழுது, அவ்வொழுக்கத்தை அவ்வூர் அறிந்து அலர் தூற்றிற்று. அவ்வலருக்கு நாணங்கொண்ட தோழி, தலைமகன் பழமையாக வந்து பயிலுகின்ற இடத்தே சென்று அவனை எதிர்ப்பட்டு வலங்கொண்டு சார்ந்து, முன்னே நின்று தொழுகின்றாள்.

தோழி:—"ஐய ! எங்களுக்கு வந்ததை என்ன சொல்வேன்? எங்களிடம் நீங்கள் காட்டிய அன்பு, இன்று அலர் ஆயிற்று ! நம்முடைய ஒழுக்கத்தைப் பலரும் அறிந்தார் ; பழி தூற்றுகின்றார். இதெல்லாம் முன்னமே உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன்.—ஆ ! இப்பொழுது, மேலும் ஒன்று வந்தது ! என் தோழியை—உங்கள் காதலியை யாரோ சிலர் மணம்பேசியும் வந்தார். எங்களுக்குக் கலக்கத்தைத் தந்தார். ஐயோ ! இது எப்படி முடியுமோ?—இவ்வளவும் உண்டாகும் வரையும் நீங்கள் இப்படியே நடந்து வந்தீரே ! அன்புடைய நீங்கள்—"

த-ன்:—"நல்லாய் ! நான் என்ன செய்யட்டும்? இதெல்லாம் நாம் எண்ணாமலே வந்தது ! என்மேல் வருத்தப்படாதே. இப்பொழுது நீ சொல்வது போலச் செய்கின்றேன்."

தோழி:—"மன்ன! நானோ உங்களுக்குச் சொல்வது ? என் பெண்ணறிவு பேதையறிவு அல்லவா ? ஏவற்பெண் நான்! 'இது செய்க' என்று உங்களைச் சொல்லத் தக்கவளோ ? அல்ல—ஆனால், என் தோழி கற்பொன்றையே பொற்பாக உடையவள் உம்மையே அல்லாமல் ஒருவரையும வேண்டாள் ! நீங்களோ, இவளிடத்தில் நீங்கா அன்புடையீர்கள் ! வேறொருத்தியை வேண்டீர். ஆகையால, உமது அன்புக்கும் இவள் கற்புக்கும் அழிவு வராதபடி நடக்க, ஐய ! பேரறிவு பெற்ற உமக்கே தெரியாதோ?"

த-ன்:—"தெரியும்தான், நங்காய் ! உன் தோழியை இன்றே உடன்கொண்டு போவேன். என் ஊருக்குப் போனதும் மணம்புரிந்துகொள்வேன். அப்பொழுது, அயலார் எடுக்கின்ற அலரும் அடங்கும். (தொடரும்)

தனித் தமிழ்ப் பகுதி

தனித் தமிழ்

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே"

"செந்தமிழ்ச் செல்வி திருவடி பரவுதூஉம்
சந்ததங் கல்வி தழைத்தற் பொருட்டே"

"ஆயதமிழ் மொழியை யன்னையைத் தெய்வத்தைத்
தூய கவிமலர்கள் தூவியே—எயநறுங்
கண்டுங் கனிதேனும் பாகுங் கலந்தமொழி
கொண்டங் குதன்பெருமை கூற"

என்னுஞ் சிறப்பினைப்பெற்ற தென்மொழியாகிய நந்தம் தனித்தமிழ் மொழிக்கு அகத்தியராக்கிய அகத்திய மரபுநூலுக்கும் முதனூலாய்த் தண்டக நாட்டில் முருகப் பெருமானால் அருளப்பட்ட "குமரம்" என்னும் எழுத்துநூல் வழங்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது. "அசலேசுரர் புத்திரனே குணதிக் கருணோதய முத்தமிழோனே" என்றும், "சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல். வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை" என்றும் இசைப்பாவலரும் முருகக்கடவுளது அருள் பெற்ற அறிஞர் பெருமானுமாகிய அருணகிரிநாத அடிகள் பாடிய திருப்புகழ்ப் பாக்களில் காணப் படுகின்றமையால் முத்தமிழ் இயனூலொன்று முருகவேள் பெயரால் வழங்கியிருக்கக்கூடுமென்றெண்ணக்கிடக்கின்றது. அகத்தியர் வருகைக்குமுன்னரே தமிழ்சிறந்திருந்ததால்

"வடவேங்கடந் தென்குமரியாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ்சொல்லும் பொருளு நாடி
முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந் தொகுத்தோனே"

என்று அகத்தியரது முத்தமிழ் மரபுநூலைக் குறிப்பிடுகிற இப்பழைய செய்யுளைப் பார்க்குங்கால் அகத்தியத்துக்கு முந்து நூலாகிய முதனூலாய்க் "குமர" மரபுநூல் வழங்கியிருக்கலா மென்று கொள்ளக்கூடியதாயுளது. முருகவேளின் நூலே அகத்தியா செய்த இயனூலுக்கு முதற்கருவியாயிருந்தமை பற்றியே முருகனிடத்துத் தமிழ்கற்றார் அகத்தியர் என்னும் உரை நிலவுகின்றது போலும்.

தமிழ் மொழியோடு சேர்த்து எண்ணத்தகும் அகத்தியர் தமிழுக்காக உழைத்தது அவர் தென்னாடு சேர்ந்த பின்னரே யாம். அவர் "பஞ்சவடிக் கடுத்த தண்டக"க் கானிலிருந்தவராயும் இராமர் கான்புக்கு உறையுநாள் அகத்தியர் இருக்கை யடைந்து அவரைக் கண்டதாயும அவரால் வரவேற்கப்பட்டாரெனவும் தண்டக நாடு காடானது வெள்ளி (சுக்கிர பகவான்) வசைமொழியாலென்றும் பின்னர் முனிவர் குடியேறி யக்காட்டைத் தமக்கு உறைவிடமாக் கொண்டாரென்றும் அகத்தியர் இராமருக்குக் கூறியதாயும், வட

மொழி வான்மீகி இராமகாவியம் கூறுவ தோடு, தமிழ்மொழி ஒட்டக்கூத்தர் பாடிய இராமகாவிய உத்தரகாண்டச் செய்யுள்

"அவன்றன் னாட்டிற் றண்டகமா மடவி யாகி [யாரழலிற்
சிவந்த வெள்ளி சாபத்தால் நீர்புனல் மிருகஞ் [சேரவின்றித்
தவஞ்செய் முனிவா ரொருங்குதலால் சன்மத [தான மெனப்பேராய்
உவந்த கருணை பொழிவிழியாய உற்ற திது [முன் பென உரைத்தான்"

என்று உரைப்பதையும், கம்பர் பாடிய இராமகாவியத்தில் அகத்தியப்படலத்தில் "நன்று வரவென்று பல நல்லுரை பகர்ந் தான், என்றுமுள தென் தமிழ் இயம்பி யிசை கொண்டான்" என்று இராமனை யகத்தியர் வரவேற்றதாயுரைப்பதையும் கொண்டு இராமாயண காலத்தில் அகத் தியர் தண்டகக் காட்டிலிருந்தாரென் றும் அதற்குப் பின்னர்தான் தென்னாடு சேர்ந்து தமிழறிந்தாய்ந்து முதற் கழ கத்துக்குத் தலைமை பெற்றாரென்றும் கொள்ளக் கிடக்கின்றது. வடமொழி வான்மீகி ராமகாவியத்தில் சீதையைக் கண்டு வருதற்காக இராமரால் அனுப் பப்பட்ட அநுமான் தெற்கே பாண்டிய னுண்ட கபாடபுரத்தைக் கண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. கடல் வெள்ளத் தால் ஆழ்ந்த தமிழ்நாட்டு நிலப்பாகத்தைச் சேர்ந்தது அந்தக் கபாடபுரமும். ஆக வே இராமாயண காலத்துக்கு முன்னரே அகத்தியர் தென்னாடு சேர்வதற்கு முன் னரே பாண்டிய வேந்தர் ஆட்சியும் தமி ழிருந்து வழங்கிய மாட்சியும் தெளிவாய் விளக்கமாகின்றன. இதனால் அகத்திய முனி வடபாங்கரிருந்து தென்பாங்கர் வரும்போது அவரோடு வடமன்னர் இளஞ்சிறார் வந்தனரென்றும் காடுகளைத் திருத்திக் குடியேற்ற அவர்கள் சேர, சோழ, பாண்டிய வேந்தரா யானார் களென்றும் கூறும் கட்டுரை வெற்று ரையாமென்பது விளங்கும்.

அகத்திய முனிவர் வடமொழி மறைகளுள் முதலாவதாகிய ருக்மறைக் குத் தலைவர்களாய முனிவர்களில் ஒருவ ரென்று மொழிநூல் சொல்லுகிறது. அப்படி யம்மறைகள் கோவை செய்யப் பட்டது ௮௲ (8000) ஆண்டுகட்கு முன் னமை என்பது வடமொழி கொள்கை நூலாராய்ச்சி செய்த ஆங்கில அறிவாளி களும் நாவலந்தீவின் அறிவாளிகளும் எடு த்துக் காட்டுகின்றார்கள். பாரதகாலத் தில் பாண்டவரது படைக்குப் பெருஞ் சோறு போட்ட உதியஞ் சேரல் என்ற மன்னரைத் தலைச் சங்கப் புலவராயிருந் தவரென்று இறையனார் அகப்பொருள் களவியலுரையில் சொல்லப்படுகின்றது. முரஞ்சியூர் முடிநாகராயர் இதனைச் சிறப் பித்துப் பாடிய,

" .. .. ..நீயோ பெரும
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருது களத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடு [த்தோய்"

என்னும் செய்யுள் புறநானூற்றில் காணப்படுகிறது. வடமொழி வியாசபாரதத் தில் தென்மதுரைக் கண்ணித்தாய மணவி புரத்தைப்பற்றிச் சொல்லப் படுகிறது. வியாச முனிவரது காலம் இன்றைக்கு ௫௲ ஆண்டுகட்கு முன்னது என்று கருதப்படுகின்றது. வடமொழிப் பாணினி யியல் நூலில் பாண்டவர் பெயர்கள் சொல்லப் படுகின்றமையால் பாரதத்து க்குப் பின்னர்தான் பாணினி நூல் ஆக் கப்பட்டிருக்கவேண்டும். புகழுடல் நிறு விச்சென்ற புலவர் வி. கோ. சூரியநாரா யண சாஸ்திரியார் ௮௲ ஆண்டு கட்கு முற்பட்ட ஓர் தமிழ்க் கல்வெட்டைப் பற்றித் தமிழ் வரலாற்று நூலில் எழுதியி ருப்பதாலும், மெசொபொடோமியா நாட் டைச்சேர்ந்த பழைய பாபிலோனியர் ஆட்சிக்கு முந்திய அக்காடியர் மொழி யில் தமிழ்ச்சொற்கள் மிகுந்து கலப் புற்றுக் காணப் படுகின்றதோடு தமிழ் நாட்டு ஊர் என்னும் இடப்பெயர் அந் நாட்டில் ஓரிடத்துக்கு "எர் தூர்" என்று வழங்கப் பெறுவதாலும் தமிழ் மொழி ௧௦௲ ஆண்டு கட்கு முன்னரே செம்மைப்பட்ட நிலங்களில் எல்லாம் சென்று பரந்திருந்ததாகத் தெரிகிறது.

இத்தகைய நீடித்த பரந்த ஆட்சியைப் பெற்றுள்ள தனித்தமிழ் மொழியைப்

பற்றி கால்ட்வெல் என்னும் ஆங்கில அறிவாளி யாக்கிய தம் இயல் நூலில் காணப்படுவது:—"திராவிட மொழிகளின் எழுத்து நூல்களையும், நிகண்டு, திவாகரம், பிங்கலந்தை, அகராதி முதலியவைகளையும் ஊன்றிப் படித்து அவற்றைச் சீர்திருத்தப்பட்ட (சமஸ்கிருத) மொழியின் அமரம் முதலிய நிகண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தவர் யாரும் தமிழ் மொழியின் மரபு வடிவங்களும், சொலவடிவ வேறுபாடுகளும் வேற்றுமைகளும் அவற்றின் மிக்க வேண்டியபகுதிகளின் மிகுதியானவைகளும் வடமொழியினின்று மருவியேனும் வேருய்ச் சிதைந்தேனும் வந்திருக்குமென்று நினைக்க மாட்டார்கள்." என்பதாம். தமிழ்மொழியில் பல நூல்களிருந்தன வென்பதும் அது பெருமையைப் பெற்றிருந்த தென்பதும் வின்ஸ்லோ என்னும் ஆங்கிலப் பழைய அறிவாளி தம் சொற்பொருட் கோவையின் நூன்முகத்தில்,

"கிரீக்கு, லத்தின் மொழிகளினும் தமிழ்மொழி யாப்புமுறையிலும் நேர்மையிலும் அழகுடையது"

"தமிழில் தேர்ந்த புலவர்களது தொகையைப்போல் அவனியில் மற்றெந்த மொழிப் புலவர்களும் இல்லை. தமிழர்களின் மிகப்பழைய காவியங்கள், சொற்பொருட்கோவைகள், எழுத்து நூல்கள், மருத்துவ நூல்கள, சட்டநூல்கள், சிற்ப நூல்கள் மறைநூல்கள் முதலிய வெல்லாம் செய்யுள்களிலேயே யிருப்பதால் அவற்றை யாக்கியோராகிய புலவர்களது தொகை மிகையாம்."

என்றும், மச்ச புராணம் முகவுரையில்—

"இயல் நூல்கள், அறநூல்கள். காப்பியங்கள், வழிபாடுநூல்கள், அறிவு நூல்கள் என்பன தமிழ்மொழிக்கே சிறப்பாகப் பலவுள்ளன. தமிழ் நூலாசிரியரிடத்தே செம்பொருளறிவினை வடநூலார் கடன் வாங்கினார்" என்றும், "மாக்ஸ் மூல்லர் என்னும் ஆங்கில அறிவாளி "ஆக்கப்பொருணூல்களின் ஆராய்ச்சியைக் குறித்த தமிழ் மொழியிலுள்ள நூல்கள் எண்ணிறந்தன. இத்துறையில் இறங்கியோத விரும்புகின்றவர்கள் மிக்க பயனையடைவார்கள்."

"தமிழ் இலக்கியங்களில் பிற மொழிகளில் இல்லாத மிக்க சிறப்புகள் பலவுள அவை வரலாற்றின் பொருட்டு மிகவும் பயன் படத்தக்கவை." என்றும் காணப்படுகிற குறிப்புகளால் தனித்தமிழ்ச் செல்வியின் கீர்த்தி விளக்கமாம்.

இவற்றால் பழைய சிறப்புகள் பலபொதிந்து கிடந்தன வென்பதும் அவை பிறந்தகத்துப் போற்றுநரின்றியோ வேறெதனாலோ வேற்றகம் புக்கு வடிவுமாறி கண்டோர் கேட்டோர் மிக்க வியப்பும் மேலாம் நலமும் பெற்றுய்யுமாறு செய்து வருகின்றன வென்றற்கு ஐயப்பாடின்றாம். ஆதலின் தனித்தமிழ்ச் செல்வியின் கீர்த்தியைப் போற்றி இறைவனருளால் எந்நலங்களையும் எய்தப்பெற்று இன்பமுறக் கடவோம்.

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்

2nd Asst., Corpn., School, Choolai.

நிலத்தின் தட்ப வெப்பங்களால் மொழிநடை மாறல்

வேலூர் ஊரீஸ் கல்விக்கூட ஆசிரியர் க. ப. சந்தோஷம் அவர்கள் பி. ஏ. எழுதியது.

(௧௱௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

வெப்ப தட்பங்களா லுண்டாகும் மொழிநடை மாறலை வேறொருவகையிலுங் காணலாம். பொருள்கள் உருகுவது வெப்பத்தால நடக்கும் செயலாதலால் உருக்கி எடுக்கப்படுவன நமக்கு மிக்கப் பழக்கமானவை; பொருள் உறைவது தட்பத்தால் நடக்குஞ் செயலாதலால் உறைவதாலாவன மேல் நாட்டார்க்குப் பழக்கமானவை. நெய் என்பதை நாம் எளிதில் அறிவோம். நெய் இல்லாதகாலம் நம் நிலத்தில் இருக்காதென்றெண்ண இடமுண்டு. ஆங்கில மொழியில் நெய் என்பதற்குச் சொல்கிடையாது; உருக்கிய வெண்ணெய் என்றே அதைச் சொல்லவேண்டும். (ghee) என்று வழங்குஞ் சொல் ஆங்கிலமன்று. ஆனல்

ஆங்கிலத்தில் (Butter) என்னுஞ் சொல்லிற்குத் தமிழில் தனிமொழிகிடையாது. வெள்ளைநிறமுடைய நெய் என்று பொருள் தரும் 'வெண்ணெய்' என்னுஞ் சொல்லை நாம் வழங்குகிறோம். வெண்ணெயினின்று நெய் தோன்றுவதால் வெண்ணெய்க்குத் தனிப் பெயரிடாமலேயே, நெய்யை முதலிலறிந்து அதற்குப்பின் அதன் முன்னிலைமையாகிய வெண்திரளுக்கு வெண்ணெய் என்று தமிழர் பெயர்வைத்தது, தகப்பனுக்கு முன் பிள்ளை தோன்றினாற் போலிருக்கிறது.

ஆனால், பின்னால் வருவதைக் கொண்டு முன்னால் தோன்றுவதற்குப் பெயர் கொடுப்பது வேறொரு ஆராய்ச்சியிலும் வெளியாகிறது. தமிழ் எண்பெயர்களில் 'ஒன்பது' என்பதற்கு ஒன்று குறைய பத்து என்று பொருள். பின்னால் வரும் 'பதது' தனக்கு முன்னதாகிய ஒரு எண்ணிற்குப் பெயராய் நிற்றலை நோக்குங்கால் வெண்ணெய்க்கு முன் நெய்யை யறிந்தவாறே ஒன்பதிற்கு முன் பத்தைத் தமிழர் அறிந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. தொண்ணூறு, தொள்ளாயிரம், என்பனவும் அதையே விளக்கும். ரோம எண்கள் எனக் கருதப்படும். I II III———IX X என்பவற்றிலும் நாம் மேற்கூறிய தமிழர் முறையே கைக்கொள்ளப்படுகிறது. ஆனால், அந்தமுறை எண்களை எழுதுவதில் மட்டும் தோன்றுகிறதேயன்றி எண்பெயர்களில் இல்லை.

நிற்க, வெப்ப நிலத்தில், தோன்றல், வளர்தல், அழிதல் முதலிய தொழில்கள் விரைவில் நடக்குமென்றும், தட்ப நிலங்களில் அவை அவ்வளவு விரைவில் நடவாவென்றும் முன்னமே சொன்னோம். அதன் பயனால் வரும் மொழிமரபை இங்கு ஆராய்வோம். அரும்பு மலராவதற்கும், பிஞ்சு கனியாவதற்கும் இடையிலுள்ள நிலைமைகளை நம்மவர் ஊன்றிப் பார்த்து அவைகளுக்கு வெவ்வேறு பெயர்களிட்டிருக்கிறார்கள். அரும்பு, மொட்டு அல்லது மொக்கு, முகை, மலர், என்பவற்றுள் பின் இரண்டிற்கு மட்டும் ஆங்கிலத்தில் சொற்களுண்டு. பிஞ்சு வடு, காய், கனி, என்பவற்றுள் கடைசியொன்றைத் தவிர்த்து மற்றவற்றிற்கு ஆங்கிலத்தில் தனிமொழிகளில்லை. பிஞ்சு என்பதை ஆங்கிலத்தில் தெரிவிக்க மூன்று நான்கு சொற்கள் வேண்டும். காய் என்பதை முற்றாத பழமென்றுதான் சொல்லவேண்டும் ஹிந்துஸ்தானியிலும் சொல்நடை அங்ஙனமே யுள்ளது.

அன்றியும், மேல் நாட்டார்க்கு நம்மினின்றும் முற்றும் முரண்பட்ட பொருளைக் கருமை என்னும் பண்புச் சொல் குறிக்கிறது. வெளிச்சமின்மையால் வருந்தும் அவர்களுக்கு இருளும், இருட்டைக் குறிக்குஞ் சொற்களும் பெரும்பாலுந் துன்பத்தை விளக்குவனவாய் நிற்றல் நாம் எளிதில் உணரக்கூடியதே. பழைய தமிழ்நூல்களிலோ 'கருமை' என்பதற்குப் பெருமை என்ற பொருளுண்டு. காராம்பசு, கார்மங்குல், கரியமால், என்னும் சொற்றொடர்களில் அதன் பொருளைக்கண்டு பொருத்திக்கொள்க. கருப்பண்ணன், கருப்பையா, என்று மக்களழைக்கப்படுதலும் குறிப்பிடத்தக்கதே. அன்றியுந் தெலுங்கில் 'கரிய' என்பது "நல்ல" என்று மொழிபெயர்க்கப் பட்டிருப்பதை யறியவும். "சருந்தனங்கைத்தலத்தவுய்த்துச் சொரிந்திட்டு" என்பதும் நம் கூற்றை விளக்குகிறது.

ஆதலின், ஆங்கிலத்தில் அழிவையும் இழிவையு முணர்த்துங் கருமை தமிழில் நன்மையைக் குறித்தது காண்க. இனி செம்மை என்னுஞ்சொல் நேர்மையையுஞ் சிறப்பையும் நமக்கு அறிவிப்பது எளிதிற்காணக் கிடக்கிறது. தட்ப நிலத்தார்க்கோ அது தீங்கையும் இன்னலையுந் தெரிவிப்பது ஆராயற்பாலதே. இதைப்பற்றித் தெளிவாய் ஒன்றும் விளங்கவில்லையாதலால், தட்பநாடுகளில் அதன் பொருளுக்கிடம் என்னவென்று கூறுவதை நிறுத்தி வெப்பநிலத்தில் அது பெற்றிருக்குஞ் சிறப்பைப்பற்றி மட்டிலும் எழுதுவோம். பெரும்பான்மையாய் நம்முடைய நிலத்தில் முதிர்ந்து கனிந்த பழங்களும், முற்றிய மற்றைய

தும் செம்மை நிறத்தை யடைகின்றன; ஆகையால், சிவத்தல் என்பது பழுத்தல் என்பதையறிவிக்கும். பழுத்தல் என்பதும் பூத்தல் என்பதைப்போல் நிறைவாகிய நிலைமையை யுணர்த்தும், நிறைவெனப்படுவது குறையினின்றும் நீங்கியது; குறையெனப்படுவது குற்றம். ஆதலால், செம்மை எனுஞ்சொல் குற்றமின்மையைக் குறிக்கும். செந்தமிழ், செங்கோல், என்பவற்றிலும் செப்பம், செம்மல், என்பவற்றிலும் மேற்கூறிய பொருள் வருவது காண்க. சிவம் என்ற உயர் சொல்லுந் தமிழே யாதலால் அதன் பொருள் ஊன்றி நினைப்பவர்க்கு வெளிப்படை. சிவந்தது சிவம் ஆரியத்தினின்றும் அது தோன்றியதென்று கூறுவார் வழக்கு இழுக்குடையது.

இதுகாறும் வெப்ப தட்பங்களாலாகும வேற்றுமைகளை யுரைத்தோம்; ஒற்றுமையும் உண்டு. பச்சை என்பது எல்லா நிலத்தவருக்கும் இனிமையைத் தருஞ் சொல். ஐரோப்பியரும் நம்மவரும் பெருங்களிப்புறும் இடங்களில் பச்சையிலைகளையும் மரங்களையுங் கொணர்ந்து வீடுகளை அழகு செய்வது நாம் பெரும்பான்மை காணுங்காட்சியே. இப்பச்சை நிறத்தை நிலமெங்கும் பரப்பிய கடவுளின் அருள்தானென்ன! நமக்குத் தண்மையை விளக்கு மந்திறம் மேல்நாட்டாருக்கு உயிர் வாழ்தலைக் காட்டாநிற்கும். இங்ஙனமே மற்ற நிறங்களையு மாராய்ந்தறிதல் கூடும். உளந் தண்மை கொள்ள, நன்மையைப் பற்றிச் செம்மையை நாடி உண்மையை யறிய முயல்வோர், முட்டின்றி இறைவன இன்னருள் பெற்று வாழ்வாராக.

ஆலங்குடி வங்கனார்

இவர், கடைச்சங்கப் புலவருளொருவர். ஊர், ஆலங்குடி. பெயர், வங்கனாரென்ப. இவர், நயப்புறப்' பாடும் புலவர். இவர்பாடல்கள் அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை, திருவள்ளுவமாலைகளிற் காணப்படுகின்றன. பாடல்களொவ்வொன்றும் உள்ளுறை, மெய்ப்பாடு, இறைச்சிகள் பொதிந்தன.

இனி, இவரதூர் இதுவென்பதும், பெயர், பெயரோ அல்லது பட்டப் பெயரோ என்பதும் தெள்ளிதின் விளங்கவில்லை. என்னை? ஊர் ஆலங்குடி. இப்பெயரிய ஊர்கள் பல. பேர். வங்கனார். சிறப்புடையாரைப் பெயர் கூறாது பெயரையடுத்த பட்டப் பெயரையே பெயராகக் கோடல உலகியலுண்மையின் அஃது பெயரோ சிறப்புப் பெயரோ (பட்டமோ) ஆகலினென்க.

இனியிக்காட்டிய விரண்டுடனே குலனையும் ஆராய்வது, எனது வேலைக்கிடையிற் கழியும் ஒழிவின் பயனெனக் கருதித்துணிந்தனென்.

ஆராய்ச்சி:—திணை ஐந்தனுள்ளும் பெரிதும்,

"முயப்பிடிச செவியினன்ன பாசடை"
"தடமருப் பெருமைப் பிறழ்சுவ லிரும் [போத்து."
"வாழைமென்றோடு வார்புறு பூக்கு"
—நற்றிணை.
"கழனிமரத்து விளைந்துகு தீம்பழம்"
"காலையெழுந்து கடுந்தேர் பண்ணி"
—குறுந்தொகை
"பூவற்படுவிற் கூவற்றொடிய"—புறம்.

என மருதத்திணையினவாகப் பரத்தையிற் பிரிவினையே கொண்டு யாப்பு யாக்கும் உள்ளமுடையாரெனக் காணப்படுகின்றாராகலின் இவர், மருதநிலத்தூரிலிருந்து பண்ணையினெடிதுழன்றவரென்பதும், பரத்தையிற் பிரிவினிற் பன்னெடு நாட் பழகினவரென்பதும் துணியப்பெறுமாகலிற் றன்குறி வழக்கினின்றாரென்பது சாலும்.

இனி, "மறங்கெழு சோழ ருறந்தை யவையத்து"—நற்றிணை. இதிற் சோழர்

தலைப்பட்டினமாகிய உறந்தையை(உறையூர்) ப்பற்றி 'யுரைத் தலின் இவரதூர், உறையூரை யடுத்ததெனல் விளங்கும்.

இனி, இவரது பேர் (அல்லது) பட்டம், வங்கணாராகலின், இப்பெயர் அல்லது பட்டத்தைக் கொண்டவர்கள், இப்போது நான்காம் இனத்தாராக எண்ணப்படுகிற கள்ளரேயாவர். அன்றியும் உழுது உழுவித்துண்ணும் பகுப்பினராய், "உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப்பிறந்தாரே" "நாலாவான், மந்திரியுமாவான் வழிக்குத்துணையாவான்" "நீடு சூத்திர நற்குலஞ் செய்தவத்தினார்" என்று விதந்தோதப் பெற்றவர்களும் இவர்களே. மேற் காட்டிய "வங்கணார்" அல்லது வங்காரமுத்தரையர் என்ற சிறப்புப் பெயர்களும் இவர்களுக்கே யென்ப தொருதலை. இச்சிறப்புகளைப் போன்ற வேறு பெயர்களும் நூல்களில் மலிந்து காணக் கிடக்கும். அவற்றுட் சிலவருமாறு: — பெருமுத்தரையர், செம்பியமுத்தரையர், அதியமான், தொண்டமான், காடவர்கோன், நாடாள்வார், சேதிராயன், சேதுபதி, தேவர், மழவர் என்பன. பிறவும் உள. பின்னரும், பண்ணையிற் பயிறலும் பயிற்றுவித்தலும், பரத்தையிற் பிரிதலும் கள்ளர்க்கே பெரும்பாலன வென்பது கண்கூடாம்.

ஆகவே, இத்துணையும் போந்த ஆராய்ச்சியால், "ஆலங்குடி வங்கணா" என்னும் இப்பெரியாரதூர், உறையூர்க்கடுத்துக் கீழ்த்திசை ஒரோவொன்றரைக் காவதமுள்ள ஆலங்குடி என்பதும, அவ்வாலங்குடியில் இன்றும் வங்கணார், வங்காரமுத்தரையர் என்னும் சிறப்புப்பேர் பெற்ற கள்ளர்களிருத்த லுண்மையின் பெருந்தகையார்க்கு வங்கணார் என்று அப்பேர் அல்லதுபட்டம் வாய்ந்ததென்பதும், அவரது குலம், கள்ளர் என்பதும் ஆமெனலெனதுள்ளக் கிடக்கை.

இளங்காடு முருகைய வாத்தியார்.

திருக்குறள் அதிகார அடைவு

திருவள்ளுவனார் அருளிச் செய்த திருக்குறளானது ஒப்பதும் மிக்கதும் இல்லாததோர் சிறந்த நூலாகும். சிறந்த நூல்கள் பலவற்றை ஒருங்கெடுத்துக் கூறப்புக்கார் பலர் திருக்குறளையே முதற்கண் வைத்துக் கூறுவாராயினர். திருக்குறள் கூறும் பொருள்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வெவரும் மேற்கொள்ளத்தக்கவாயுள்ளன. ஆதலாலன்றோ மேற்புலத்தவர்களும் இதனைத் தத்தம் மொழிகளில் பெயர்த்து ஓதி வருகின்றனர்? இந்நாட்டுப் பிற மொழிகளிலும் இது பெயர்க்கப்பட்டு வருகின்றது. வடமொழியிலும் இதனைப் பெயர்த்து வருகின்றனர் எனச் சின்னாளாகக் கேள்வியுண்டு.

இந்நூல் பால், இயல், அதிகாரம் என்னும் பிரிவுகளை யுடைத்தாய் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களான் இயன்றுளது. இந்நூலின் பெரும் பிரிவுகள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. இப்பிரிவுபற்றியே இது முப்பால் என வழங்குகிறது. திருவள்ளுவ மாலையிலுள்ள பல பாக்களில் முப்பால் எனும் பெயர் காணப்படுவது இப் பாற்பிரிவில் யாதும் பிறழ்ச்சிக்கு இடனின்று. இயல் அதிகாரங்களில் சிற்சில பிறழ்ச்சிகள் உண்டாயின. அவற்றுள், அறத்துப்பாலின் அதிகாரப்பிறழ்ச்சியை இங்குக் காட்டுவான் அமைந்தேன். பாயிரம் இல்லறம், துறவறம், ஊழ் என்னும் நான்கு இயல்களையுடையது அறத்துப்பால். இதனை,

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக-வாய
அறத்துப்பால் நால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

என்னும் வெண்பாவானும் உணர்க. இந்நான்குள்ளே இல்லறவியலிலும், துறவறவியலிலும் உள்ள அதிகாரங்கள்

இங்கு ஆராய்ச்சிக்குரியன. திருக்குறட்கு உரைகண்டார் பலராகவும் பரிமேலழகர் உரைத்த உரையே வெளிப் போந்து யாவராலும் ஓதப்படுகின்றது. பரிமேலழகர் உரையே திட்ப நுட்பஞ் சிறந்த சீரிய வுரையென அறிஞர் பலரும் பாராட்டுகின்றனர். 'நூலிற்-பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன்-றெரித்த வுரையாமோ தெளி' என்றும் கூறுவாராயினர். பரிமேலழகர் திருக்குறளின் ஒவ்வோரதிகாரங்கட்கும் முறையையுங் கூறிச்செல்கின்றார். எனினும் இவர் அதிகாரங்களை முறைப் படுத்திருப்பது மற்றொரு உரைகாரராகிய மணக்குடவர் கொண்ட முறையுடன் மாறுபடுகின்றது. இதனை அண்மைப் பொழுதிலே அறத்துப்பால் அளவில அச்சேறிவந்த மணக்குடவருரை நூல் கொண்டு அறியலாகும். இனியவை கூறல், அடக்க முடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை என்ற அதிகாரங் களைப் பரிமேலழகர் இல்லறவியலில் வைத்துள்ளார். மணக்குடவர் இவற்றைத் துறவற வியலில் வைத்திருக்கின்றனர். புலான் மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை என்பன வற்றைப் பரிமேலழகர் துறவறவியலில் வைத்துள்ளார். மணக்குடவர் இவற்றை இல்லற வியலில் வைத்திருக்கின்றனர். இயல்களின் அதிகாரம் இத்துணைய வென முன்பே வரையறுக்கப் பட்டு விட்டமையின் அவை மிகுதலும் குறைதலும் எய்தாவாயின் இல்லறத்திலும் துறவறத்திலும் உள்ளன இங்ஙனம் தடுமாறி யிருப்பதன்றி அவ்வவ்வியலினுள்ளே சில அதிகாரங்கள் முன்பின்னாக மாறியும் உள்ளன.

இனி, மணக்குடவர் உரை முற்பட்டதாகலின் பரிமேலழகரே தம் கருத்திற் கிணங்க இவ்வாறு மாற்றிவைத்தனர் போலும் எனக் கொள்ள நேரும். ஆயின், பரிமேலழகர் தாமே அங்ஙனம் மாற்றினாரல்லர், அவர்க்கு முன்னும் சான்றோர் கொண்ட முறையே அவர் கொண்டுள்ளார் என்பதற்கு பலகுறிப்புகள் உள்ளன. தொல்காப்பியத்திற்கு முதலில் உரைகண்ட உரையாசிரியராகிய இளம் பூரணவடிகள், புறத்திணையியலில் வாகைத்திணையின் ஓர் துறையாகிய "கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை" என்பதற்கு 'கட்டுதல் அமைந்த ஒழுக்கத்தினைக்குறித்த நிலை; என்று பொருள் கூறி 'அஃதாவது, இல்லறத்திற்கு உரித்தாக நான்கு இனத்தார்க்கும் சொல்லப்பட்ட அறத்தின் கண் நிற்றல். அவையாவன:— 'அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவு நிலைமை, வெஃகாமை, புறங் கூறாமை, தீவினை யச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை என்பன' என்று விளக்கங்கூறி, அடக்கமுடைமை முதலிய ஒவ்வொன்றுக்கும் திருக்குறளின் அவ்வவ்வதிகாரங்களிலிருந்து காட்டுகளைக்கொடுத்துள்ளனர். இங்ஙனமே அவர் வாகைத்திணையின் மற்றொரு துறையாகிய "அருளொடு புணர்ந்த அகற்சி" என்பதற்கு 'அருளொடு புணர்ந்த துறவு' எனப்பொருள் கூறி, 'அஃதாவது, அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு என்பன வற்றைப் பொருந்துதலாம்' என விளக்கங்கூறி, அருளுடைமை முதலிய ஒவ்வொன்றுக்கும் திருக்குறளின் அவ்வவ்வதிகாரங்களிலிருந்து காட்டுகளால் காட்டியிருக்கின்றனர். நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கொண்டவாறே கொண்டுள்ளார் என்பது இத்துறைகட்கு அவருரைத்த உரையான் அறியலாகும்.

இவ்வாற்றால் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் இல்லறத்திலும், துறவறத்திலும் எவ்வெவ்வதிகாரங்களை வைத்திருக்கின்றனரோ அவற்றைப் பரிமேலழகரும் அங்ஙனமே வைத்திருக்கின்றனர் என்பதும், மணக்குடவரே மாறுபட வைத்திருக்கின்றனரென்பதும் போதரும். இளம்பூரணர் கொள்கையுடன் பரிமேலழகர் கொள்கை இங்ஙனம் ஒன்றுபட்டிருப்

பினும், அவ்வவ்வியலினுள்ளே சில அதிகாரங்கள் முன் பின்னாக அவர்கள் கொண்டிருப்பது அறியற்பாலது.

மு. வேங்கடசாமி நாட்டார்.

அதிகமான்

இரவலர்க்கினியனும், புரவலர்க்கினனுமாய்ப் புலவர்புகழ்ந்து பாடும பெற்றிவாய்ந்த இவ்வீரர் பெருந்தகை, கடையெழுவள்ளல்களில் ஒருவனாகச் சிறந்து விளங்கினானென்பது கழக நூற்களில் ஒன்றாகிய "புறநானூற்"றில் கரு௮-ம் செய்யுளாகிய "முரசுகடிப்பிகுப்பவும்," என்னும் முதலடியையுடைய பாட்டாலும், "சிறுபாணாற்றுப்படை"யில் அ௨, முதல் க௨௨ வரையுள்ள அடிகளாலும் அறியப்படுகின்றன. இங்ஙனம் பாமாலை புனையபபெற்ற வள்ளலும், மாவீரனுமாகிய இவ்வதிகமானது வரலாறு முழுமையும ஒழுங்காய் அறிந்து மகிழ்தற்கில்லை யெனினும், கழக நூற்களிற் தலைசிறந்து புலமைக்குவேந்தனாய்விளங்கிய "பரணர், பெருஞ் சித்தரனார், போன்முடியார்," முதலிய புலவர் பெருமக்களும், நல்லிசைப்புலமை மெல்லியராகிய ஔவையாரும், பாடிய செய்யுட்களால் ஒருவாறு இவனது வரலாற்றை உணர்தற்கு எளிதாகின்றன. இங்ஙனம் உணர்தற்குரிய சுருங்கிய கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து திரட்டப்படும் அதிகமானது தன்மைபெருமைகளைக்கண்டுகளித்தல், அறிஞர்க்கு இன்பம் பயப்பதாகும். என்னெனின், ஒப்புயர்வற்றசிறந்த மக்களின் நற்றன்மை நற்செயல் சீர்களைத் தெரிவது உலகம் நல்வழியிற் செல்லற்கு இன்றியமையாத தன்றோ? நன்னெறிக்கு வழிகாட்டியாக மேலோர் வரையறுத்துள்ள முறை நூல்கள் சிறந்ததென்றாலும், அம் முறைகளைப் பின்பற்றி யொழுகி நன் னெறி காட்டிய நல்லோர்வரலாறு நலமானதாலென்க.

உலகில், ஒருவரின் வரலாற்றைத் தீட்டப்புகின், வரலாற்றுக்குத் தலைவன் கல்வி, அறிவு, ஒழுக்கம், ஈகை, விறல், முதலிய மேலாம் பண்புகளோடு, பலராலும் புகழப் பெற்றவராக வேண்டும். அப்புகழ்ப் பெயரானது பலரும் விதந்து கொண்டாடி எண்ணக் கூடியதாயுமிருக்கவேண்டும். இவ்வகையில் நமது வளளல்பெருந்தகையாகிய "அதிகமானெடுமோனஞ்சி" சிறந்தவன் எனக் கூறுவது மிகையாகாது.

ஓதியறிந்து மகிழ்தற்குரிய பொருள்கள பல உண்டென்றாலும, அவைகளில் எல்லாம் கற்போருக்கு அன்புறுகச்செய்வதும். அறிவைப் பெருக்க வல்லதும், இன்பத்தை யெய்துவித்து பெருநன்மையைத் தருவதுமான இவ்வகை வரலாற்று ஆராய்ச்சியே சிறந்ததன்றி மற்றவையாகா.

க. ஊர்

வள்ளன்மையாற் சிறந்த அதிகமான் எனும பெயர்புனைநத இவ்வேநதர் பெருந்தகை ஆட்சிபுரிந்த ஊர், மைசூர் நாட்டிலுள்ளதும், கொல்லிக்கூற்றத்தின் கண்ணதுமான "தகடேரனை கொல்லிக்கூற்றத்து மலையினின்று இவன், பெருஞ்சேரல் இரும்பொறை"யோடுபோர் செய்தானென்று "பதிற்றுப் பத்து" அ-ம் பத்தால் அறியப்படுவதால் தகடூர், கொல்லிக்கூற்றத்துள்ளதெனச் சிலர் எடுத்துக் கூறுகின்றனர். அதிகமான் ஆட்சிபுரிந்த தகடூர், சேலஞ்ஜில்லா தர்மபுரிக்குப் பக்கத்துள்ள தென்பதே கல்லேட்டு ஆராய்ச்சியில் வல்லுநர் கூறும் உறுதிபெற்ற முடிபாம்.

உ. பெயர்.

இவனைப் புலவா திலகர், 'அதியன்' 'அதிகமான்,' 'அதிகமா னெடுமோனஞ்சி' 'எழினி,' 'மழவர்பெருமகன்,' எனப் பல பெயரிட்டு வழங்குவர். இங்ஙனம் வழ

ங்குவதற்குப் போதிய சான்று கழகச் செய்யுட்களில் காணப் படுவதேயாம் அவைகள் அடியில் வருமாறு:—

௧. "அதியன்":—

"நண்சபிழைப் பறியாக் கழலொடி யதிகன்" (அகம் ௧௯௨)
"ஆர்கலி நறவினதியர் கோமான்" (புறம் ௯௧)
"மதியேர்வெண்குடையதியர்கோமான் ௨௩௯
"அதியர் கோமான்" (நற்றிணை ௧௯௨)
"அரவக்கடற் றானையாதிகன்" (சிறுபாணாற்றுப்படை)

௨. "நெடுமானஞ்சி":—

"கடிமதிலரண்பல் கடந்த நெடுமானஞ்சி" (புறம் ௯௨)
'மடவர் மகிழ்துணை நெடுமானஞ்சி' (புறம் ௩௧௫)
"கடுமான்றோன் றனெடுமானஞ்சி" (புற ௨௦௯௯)

௩. அஞ்சி:—

"போரடுதிருவிற்பொலந்தாரஞ்சி" (புறம்௯௧)
"பகைப்புலத்தோனேபல்வேலஞ்சி" (பு. ௧௦௩
"அஞ்சி அத்தைமகனார்" (அகம் ௩௫௨)
"நெடுநெறிக் குதிரைக் கூர்வேலஞ்சி" (அகம் ௩௭௨)

௪. எழினி:—

"கூவிளங் கண்ணிக் கொடும்பூணெழினி" புறம் (௪௧௫௮)
"தெவ்வடுகால வைவே லெழினி" திவாகரம்
'யொள்வாட்பொய்யாவெழினி" (புறம்௨௩௦
"வெம்போர் நுகம்படக் கிடக்கும் பல்வே லெழினி (குறு ௮௦)

௫. மழவர் பெருமகன்:—

"ஒளிறிலங்கு—நெடுவேன் மழவர் பெருமகன் (புற ௮௮)
"வழுவில் வண்கை மழவர் பெரும! (புற ௯௦)

என்பனவாம். மேற்குறித்த செய்யுள்களின்குறிப்பால் அதிகமான்*"மழவர்" எனப்படும்ஒருவகைவீரர்பாற்பட்ட அதியர்குடியினன் ஆவன். "அஞ்சி" என்பது இவனது இயற்பெயர் போலும். சினமிகு முன்பின் வயமானஞ்சி யினங்கொண்டொளிக்கும் மஞ்சுவருசுவலை (அகம் ௧௧௫) எனவரும் அகநானூற்றுச் செய்யுளால் பகைவர்க்கு இவன் அஞ்சி ஒளித்ததனால் "அஞ்சி" எனக் கருவிப் பெயர் கொள்ளவும் இடமிருக்கிறது.

(௩) மலை

இவனுக்குரிய குன்றம், "குதிரைமலை" எனப்பெயர் பெறும். இது "மூராதேந்திய குதிரை" (புறம் ௧௫௮) என்பவற்றாலறிக. இம்மலை இப்பொழுதுள்ள விடம் இன்னதெனத் தெரியக்கூடவில்லை. ஆயின், குதிரைமலை எனப்பெயருடைய மலையொன்று கோயமுத்தூர் பேரூரில் உடுமலைப்பேட்டையைச்சேர்ந்த விடத்தில்இருக்கிறது. இம்மலையில்பழைய கோட்டைகளும் அகழிகளும்உண்டெனத் தெரிகிறது. இம்மலைப்பக்கத்துள்ள ஆற்றிற்கும், "குதிரை யாறு" எனப்பெயர் கூறுகின்றனர். இம்மலையும் ஆறும், "பெருஞ்சித்திரனார்" என்னும் புலவரால் புகழ்ந்து பாடப்பெற்ற வள்ளல் பெருந்தகையாகிய "குமணமன்ன"னுக்கு உரியதென வரலாற்றுக்காரர் கருதுகின்றனர். (இலக்கண விளக்க வழிவந்த திரு சோமசுந்தர தேசிகர் அதிகமானுக் குரிய குதிரைமலை, இப்பொழுது தென்கன்னடம் பேரூரிலுள்ள குதிரைமூக்குமலையே அதிகனது குதிரைமலையாக இருக்கலாமெனக் கருத இடமுண்டென்று எண்ணுகின்றனர்.)

(௪) மாலை.

இவ்வேந்தர் பெருந்தகை அணியும் மாலை, வெட்சியினது பெரியமலரையும், வேங்கைப்பூவையும் கோத்ததாம். இது:- "வெட்சிமாமலர் வேங்கையொடு விரவி" (புறம் ௧௦௦) எனவருவன வற்றாலறிக. "இரும்பனம் புடையல்" (புறம் ௯௯) என்ற அடிகளால் இவனுக்குரிய மாலை பனைமாலை என்றறியப்படும். இவன் பனைமாலையையும் பூண்டதானது தான் சேரற்கு உரிமையும் ஈந்தனன் என்பதையும் உணர்த்துதற்குப் போலும்.

* இவன் வழித்தோன்றல்களே பிற்காலங்களில் "மழவராயன்" என்னும் பெயர்புனைந்த குறுநில மன்னர்களாகவும், அமைச்சர்களாகவும் படைத்தலைவர்களாகவும், சோழ மன்னர் மன்னர்களின் கீழ்த் தென்னாடுகளில் இருந்து வந்தனரென்று தெரிகிறது. இக்காலத்திலும், இப்பெயர் புனைந்தோரிற் சிலர் தஞ்சை திருச்சிமுதலிய பேரூர்களில் இருக்கின்றனர். இவர்களெல்லாம் மேலே சொல்லப்பட்டவர்களின் குடிகளென்றே பழைய வரலாறுகளை ஆராய்ச்சி செய்யும் அறிஞர் பலரும் கருதுகிறார்கள். (செந்தமிழ் ௧௨-ம் தொகுதி)

புறநானூற்றின் உரையாசிரியர், இவனுக்குப் பனந்தார் கூறியது 'சேரமாற்கு உறவாதலின்' என்று குறித்திருப்பதும் சான்றாகக்கொள்க.

(௫) அரண்.

* அதிகமானது குதிரைமலையைச் சேர்ந்த இவன் பட்டணம் பிறமன்னரால் தாக்கமுடியாத அரண் வலியுடையதென்றும், மலைக்குழாங்கள் போன்ற மாளிகைகளையுடையதென்றும் கூறுவர். இதனை,

"ஊர்வலர் குறிக்கி னல்லது காவலர்
கனவிலுங் குறுகாக் கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்ப"
(புறம் ௩௯௦)

என்ற அடிகளிற் காண்க.

வீரம்.

பகைவரஞ்சிப்புறங் காணுமாறு போர்புரிவதில் நிகரற்ற திறனையே கொண்டவிறன்மிக்க, அதிகமா னெடுமானஞ்சியினது விறற்செயல்கள் புறநானூற்றில் பலவிடத்தும் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டொன்று இதன் கீழ் காட்டுவாம்:—

க

"களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைகல்
லெண்டேர்செய்யுந் தச்சன்
றிங்கள் வலித்த காலன் னோனே" (புறம் அஎ)

உ

யாவி ராயினுங் கூழைத் தார்கொண்
டியாம் பொருது மென்ற லோம்புமி னோங்குதிற
லொளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூ ணம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோ ளென்னையைக் காணா வூங்கே
(அஅ புறம்)

௩

"மறப்புலி யுடலின் மான்கண முளவோ!
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
விருளு முண்டோ ஞாயிறு சினவின்!
அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ!
வெழுமரங் கடிக்குந் தாடோய் தடக்கை
வழுவில் வண்கை மழவர் பெரும!
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே',
(புறம் ௯௦.)

௫

"வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
யார்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி"
(புறம் ௯௧)

வெற்றி மேம்பாடு.

பண்டைக்காலத்தில் போர்க்களத்தில் பகைவருக் கஞ்சாது போர் புரிவதில் சிலகூட்டத்தார் நிகரற்ற திறமை பெற்றிருந்தனர். அவர்களில் அதியர் குடியினராகிய மழவர் என்னும் பெயர் சிறந்தாரே முதன்மை பெற்றவராவர். இவ்வழித் தோன்றலே நமது வள்ளல் பெருந்தகையாகிய அதிகமான். இவ்வீரன், போர்க்களத்தில பகைவரஞ்சிப் புறங்காட்டப் போர் புரிவதில் நிகரற்ற திறத்தன். இவன் தனக்குப் பகைவர்களாகிய இரு பெருவேந்தரும், ஐம்பெரு வேளிருமாகிய, சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள் மான், பொருநன் எனனும் எழுவருடன் போர்செய்து அவர்களைவென்று வாகைமிலைந்தனன் என்றால், இவனது வெற்றியின் திறத்திற்கு வேறுசான்றும் கூற வேண்டுமோ? இதனை,

"........அமையாய் செருவேட்"
டிமிழ்குரன் முரசி னெழுவரோடு முரணிச்
சென்றமர் கடந்து நின் னாற்ற றோற்றிய
வன்றும் பாடுநர்க் கரியை......(புறம்௯௯)

என்னும் புறப்பாட்டால் அறியலாம்.

(வரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
தமிழ்ப் புலவர்.

* கி. பி. ௧௧௧௭-ம் ஆண்டில் காஞ்சிச சோழ தலைப்பட்டினங்களில் மைசூர்க்கருகில் அக்காலத்திற்குச் சிறிது முன்னதாய் 'அதிகமான். என்பவன், ஒருவன் இருந்ததாகக் காணப்படுகிறது. ஆயின், அவன் போசசல விஷ்ணுவர்த்தனனுடைய சிறப்புற்ற படைத்தலைவனாகிய காவிரி கடந்தோடப்பட்ட தலைக்காட்டிலிருந்த சோழ பெருநாட்டுமன்னனை யன்றித் தகடூர் தலைவனாகிய அதிகமானல்லன்.

மார்க்கண்டேயர்

கூத்து. (௧௧௯-ம் பக்கத் தொடர்ச்சி)

மருதன்:—(இசையாய்ச் சுவடியோதல்).

பாட்டு

(ஆநந்தக்களிப்பு)

ஆலமர்கடவுளைத்தானே அன்புடன்தொழு
[துவருவதி னாலே
அல்லல் எல்லாம்பறக்கும் அருமறை முடிப்
[பொருள் அறிவுண் டாகும்
பிறவிப்பெருந்துயர்நீங்கும் பெரியதாம்அவன்
[தான் ஆம் நிலைப்பேறும்
(ஆலமர் கடவுளைத்தானே)

நல்லந்துவனார்:—ஆ அப்படித்தான் இன்னிசையாய் ஓதவேண்டும். பிள்ளைகாள் இனிமேல் நீங்கள் என்னிடம் எது சொன்னாலும் கேட்டாலும் இன்னிசையாய்ச் சொல்லவேண்டும் தெரிகிறதா ?

பிள்ளைகள்:—அப்படியே ஐயா.

அழகப்பன்:—(இன்னிசையாய்ச் சொல்லல்) ஐயரே—ஐ—ய—ரே கணக்காயரே—கணக்—காய—ரே ஒன்—று—க்கு—வரு—கிற—து.

நல்லந்துவனார்:—போ. கதிர்வேலா உன் பாடத்தை யொப்புவி.

கதிர்வேலன்:—"ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம், ஒதிடினும் உள்ளறிவைப் போக்கவேண்டாம், காதாலே எதையும் நீ கேட்கவேண்டாம், கண்திறந்து எந்நாளும் கழிக்கவேண்டாம், தீதான தொழில்விட்டுத் திரியவேண்டாம், தேடியதை இரப்பவர்க்கிழக்கவேண்டாம், வாதாடும் கணக்காயரை வைக்கவேண்டாம், மயிலேறும்பெருமானை வழுத்தாய் நெஞ்சே"

நல்லந்துவனார்:—நன்று நன்று உன் ஓதலும் ஏடும்! கணக்காயராகிய கற்பிப்போரையா வைக்கக்கூடாது? நல்லவன்தான் நீ! (அழகப்பன் வருதல்)

அழகப்பன்:—(இசையாய்) ஐ—ய—ரே—என்—ன—சொல்—வேன்—

நல்லந்துவனார்:—என்னடா அது ? என்ன நேர்ந்தது ?

அழகப்பன்:—ஐ—ய—ரே—ஒன்—றுக்—குப்—போன—விடத்—தில்—உங்கள்—குதிரை—

நல்லந்துவனார்:—என்னடா என் குதிரைக்கு?

அழகப்பன்:—உங்கள்—குதிரை—

நல்லந்துவனார்:—போதுமடா போதும் இசையாய்ப் பாடினது. சொல்லடா விரைவில்.

அழகப்பன்—உங்கள்—குதிரைக்---கொட்டகை—

நல்லந்துவனார்:—குதிரையல்லவா குதிரைக் கொட்டகையா ? என்ன இருக்கிறது குதிரைக் கொட்டகையில் ? குதிரைதானே இருக்கிறது?

அழகப்பன்:— குதி—ரைக்— கொட்—டகை—யில்—நெரு—ப்பு—

நல்லந்துவனார்:—என்ன ? நெருப்பா—பாழாய்ப் போச்சு நீ பாட்டுப்பாடி—சொல்லி முடியடா முண்டமே.

அழகப்பன்:—உங்கள்—குதிரைக்—கொட்டகை—நெருப்பால் —எறிந்து கொண்—டிருக்கக்—கண்டேன்.

நல்லந்துவனார்:—சரிதான்! நீ வந்த இவ்வளவு நேரத்துக்குள் கொட்டகை சாம்பராய்த்தான் ஆகியிருக்கும்; நான் இசையாய்ப் பாடச் சொன்னதும் உங்கள் அறிவும் எல்லாம் எனக்குச் சரியாய் நேர்ந்தன! (ஓடல்.)

பிள்ளைகள்:—அடேடே! கணக்காயரே காற்றாய்ப் பறக்கிறாரே! நமக்கென்னடா இங்கேவேலை—நாம் நம் அகங்கட்குப் போய் அடிசிலுண்போம் வாருங்களடா. (தங்கள் சுவடிக் கட்டுகளை தோளில் மாட்டிக்கொண்டு அகல்தல்)

இரண்டாம் உறுப்பு—களம் ௧

(மிருகண்டேயர் தம் குடிலின் முன்முற்றத்தில் மார்க்கண்டேயனும் அவன் தன் பள்ளித்தோழன் வைத்தீச்வரனும் பேசிவிட்டுப் பூபறித்துவர பூம்பொழில் சேரல்—இவர் தம் பேச்சைக் கேட்ட

மருத்துவதி மிருகண்டேயர் வியத்தலும் வருந்தலும்.)

வைத்தீச்வரன்:—அப்பா! போதுமடா அப்பா போதும்! நல்ல தோழன் மார்க்கண்டன். நம்மைப் பிடித்துக் கொண்டு அவன் உரைக்கிற நல்லுரைகளுக்கு அளவேயில்லை. விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டுமாம். நெற்றியில் நீறு பூசவேண்டுமாம். அதன் பின்புதான் வெளியில் போகவேண்டுமாம். நீறிடாமல் வெளியேபோனால் என்ன என்று கேட்டால், நமது திருநீறு பூசாப்பாழ் முகங்களைப் பார்ப்பவர்களுக்குத் தீவினை சேரும் என்கிறான். நமக்கு ஒன்றுமில்லையே—பார்ப்பவர்கட்குத்தானே தீவினை சேரும் அதைக்குறித்து நமக்கென்ன என்றால், பிறருக்குத் தீமை யுண்டாகத் தக்க கருவியாய் நாமிருக்கக் கூடாது.—அப்படி நாம் பிறருக்குக் கேட்டை யுண்டாக்குவதால் நமக்கு அதனால் தீவினைதானே பயனாய்க் கிடைக்கும் என்று இவ்வாறெல்லாம் அவன் எடுத்துரைக்கிற இன்னுரைகளைக் கேட்டால் நம்நெஞ்சம் மயங்குகிறது!

(மார்க்கண்டேயன் வைத்தீசா, வைத்தீசாவென்று உள்ளிருந்து கூப்பிடல்.)

அப்பா வந்துவிட்டானே! விடப்போகிறானா நம்மை! என்நெற்றியில் திருநீறு இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லையே (கையால் நெற்றியைத் தடவி யதில் நீறு ஒட்டி வருகிறதாவெனப் பார்த்து இல்லாததை யறிதல்)

ஐயோ நம் நெற்றியில் நீற்றைக் காணோமே! (சுவரைப் பார்த்து) சுவரிலிருக்கிற சுண்ணத்தையாவது பூசிக் கொள்ளலாமா! (சுவரைத் தேய்த்து ஒட்டாததைக் கண்டு)

என்ன செய்வேன்! கையிலும் ஒட்டவில்லையே. சாம்பரையுங் காணோமே (கீழே பார்த்தல்) சாணமாவது இருக்கிறதா! (அங்கும் இங்கும் பார்த்தல்)

இதோ இருக்கிறது கன்றுக்குட்டி இதைத் தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டு மார்க்கண்டேயன் எதிரில் போவோம்.

(மார்க்கண்டேயன் கூப்பிட்டபடியே வருதல்.)

ஐயோ வந்துவிட்டானே! (பரப்பரப் பாய்க் கன்றைத் தூக்கித் தலைமீது கொண்டு திரிதல்)

மார்க்கண்டன்:—வைத்தீசா, எங்கேயிருந்தாய்? இஃதென்ன வேடிக்கை?

வைத்தீச்வரன்:—இங்கேதானிருந்தேன். இது—இது—இது—

மார்க்கண்டேயன்:—என்ன — இது — இது—இது? இஃதென்ன உன் முகம் பாழடைந் திருக்கிறதே?

வைத்தீச்வரன்:—ஆ— அது —அது— அதற்குத்தான் இது.

மார்க்கண்டேயன்:—எதற்கு எது? நெற்றியில் நீ ஏன் நீறு பூசவில்லை?

வைத்தீச்வரன்:—அது அகப்படவில்லை. அதற்காகத்தான் இந்தக் கன்றுக்குட்டியைத் தலைமேலே சுமக்கிறேன்.

மார்க்கண்டேயன்:— கன்றுக்குட்டியைத் தலைமேல் சுமந்தால் நீறு பூசியதாகுமோ?

வைத்தீச்வரன்:—கன்றுக்குட்டி, மாடு இவையெல்லாம் திருநீறு காய்க்கிற மரங்களல்லவா? நீறு கிடைக்காத போது இவற்றில் ஒன்றைச் சுமந்து கொண்டிருந்தால் பாழடைந்த முகமாகாது; அதனால் பார்ப்பவர்க்குத் தீவினையும் சேராது.

மார்க்கண்டேயன்:— ஓ! அப்படியா! நன்று நன்று நின் நுண்ணறிவு! அந்தக் கன்றைக் கீழே விட்டுப்போட்டு இந்த நீற்றையணி நெற்றியில்.

(திருநீற்றைத் தன் மடியிலிருந்துதருதல். வைத்தீச்வரன் குனிந்து அதனைப்பூசல்.)

சை என்ன வேலை செய்கிறாய்? திருநீற்றைக் குனிந்தபடி யணியாதே. அப்படி யணிவதால் கீழே நீறு சிந்தாதா? சிந்துவது காலால் மிதிபடுமிட மல்லவா? அதனால் தீவினைதானே சேரும். ஆகவே அதையண்ணாந்து அணி. அப்படியணிந்தால சிந்தும் நீறு தோள்களின்மேல் விழும். ஆன்றோர் ஒழுக்கங்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்துக் கடைப்பிடிக்க வேண்டாமா?

வைத்தீச்வரன்:—ஆம் ஆம். அப்படியே செய்கிறேன். (அண்ணாந்து பூசிக் கையை யுதறி யூதல்)

மார்க்கண்டேயன்:—அடடா! என்ன அறிவுனக்கு? கீழே சிந்தினால் தீவினை சேரும் என்றதைச் செவ்வையாய்க் கருத்திலூன்றி யுணர்ந்திருப்பா யாகில் நீறு பூசிய கையை யுதறுவாயா அன்றி ஊதுவாயா? அப்படி யூதுவ தனாலும் நீறு பரந்து நிலத்தில்தானே விழும். மிதிபடு மிடங்களில் படிய லாமா?

வைத்தீச்வரன்:—பின், கையில் இருக்கும் நீற்றை யென் செய்வது?

மார்க்கண்டேயன்:—அதைக் கழுத்திலும் மார்பிலும் பூசிக்கொள்ளவேண்டும்.

வைத்தீச்வரன்:—இப்போதுதான் நீறணியும் முறை நன்றாய் விளங்கியது. இவற்றை யெலலாம் நமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்-என்னபேர் அவர் பேர்? நல்ல பேராயிற்றே—ஆம் நல்ல வெல்லந் தின்பவர். அவர் ஏன் கற்பிக்கவில்லை. ஆசிரியர் என்றால் எல்லா வற்றையுந்தானே கற்பிக்கவேண்டும்.

மாரக்கண்டேயன்:—நல்லவெல்லந் தின்பவரா—இன்னும் உனக்குத தெளிந்த அறிவுஉண்டாக வில்லையே. கல்வி கற்பிக்கும் ஓர் ஆசிரியருக்கு நல்ல வெல்லந் தின்பவர் என்றுகூட பேரிருக்குமா—நல்லந்துவனார் என்பது அவர் பேர். தெரிந்துகொண்டாயா?

வைத்தீச்வரன்:—ஆம் தெரிந்தது.

மார்க்கண்டேயன்:—உனக்குச் சாப்பிட யார் கற்றுக்கொடுத்தது? உடுக்கக் கற்பித்தது யார்? கைகாலலம்ப, நீராட, கடவுளைத் தொழக் கற்பித்தது யார்?

வைத்தீச்வரன்:—பசியே பெரிய ஆசிரியன் என்பார்கள். அதை ஒருவர் கற்பிக்க வேண்டுவதின்றி வயிறறுப் பசியை நீக்குவதற்குத்தக்க சுவைப் பொருள்களை யுண்கிறோம். மற்றவற்றைச் செய்பவர்களைப் பார்த்தும் பெற்றோர் பழக்கத்தால் கற்பித்ததைக் கொண்டும் கற்றுகொள்கிறோம்.

மார்க்கண்டேயன்:—அவற்றைப் போலவே பிறர் செய்வதைப் பார்த்துச் செய்யப் பழக்கிகொள்ள வேண்டும்.

வைத்தீச்வரன்:—ஆம ஆசிரியர் கற்பிக்காத பலவற்றைப் பற்றி நான் உன்னிடம் கற்றுக்கொண்டேன். சென்ற நாட்களில் நமது பள்ளிக்கூட வாழ்வே வாழ்வு—

மார்க்கண்டேயன்:—பாட்டு.

(விருத்தம்.)

"நான் எத்தனை புத்தி சொன்னாலும் கேட்
[டிலை யென் நண்பனே
என் இப்படியே கெட்டுழல்கின்றாய் இனி
[யேதுமிலா
வானத்தின் மீனுக்கு வன்தூண்டில் இட்ட
[வகையதுபோல்
போனத்தை மீளநினைக்கின்றனை யென்ன
[புத்தியிதே."

(வரும்.) (வெண்காட்டடிகள்)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,
2nd Asst., Corpn., School, Choolai, Madras.

பெண்கள் பக்கம்

மைத்திரேயி

நான் கூறும் வரலாற்றை யோதப் புகுந்தவர் எங்கிருப்பவராயினும் இவ வரலாறு நடந்த இடமாகிய பீகார் நாட்டிலிருப்பதாகவும் ஏறக்குறையநாலாயிரம் ஆண்டுகட்குமுன்னர்மறைகள் தொகுக்கப்பட்ட நாள்களில் தாம் இருப்பதாகவும் எண்ணட்டும். அணியாக இறக்கைகளிருப்பதாகவும் அதன் வலியால் வானில் பறந்து சென்று அந்நாட்டைப் பாரப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த நாட்டில் மிதிலைப்பேரூரும் பழை

மயான சனகாபுரி பட்டணமும் காணப் படுகின்றன. சனகாபுரிக்கு இறைவர், மன்னர் முனிவராய இல்லறத்துறவியும் பழைய நாளின் கல்வி நலங்களுக்குப் பெரிய சார்பிடமாயும், யாஞ்ஞவல்கிய முனிக்குக்கொள்கை யறிவு நூலாராய்ச்சி யில் நண்பருமானவர். பின்னாள் யாரா லும் சீதையின் தந்தையெனவும் இராம ரது மாமனார் எனவும் கூறப்பட்டவர். சனகர் என்னும் பெயரைப் பெற்றவர். முன் சொன்னபடி மேலே பறப்பதாக நம்மைக் கொள்வோம். சனகாபுரியைச் சுற்றிய வெளிப்பாங்கர்களில் பரந்த நில வெளிகளும், குன்றுகளும் காணப்படு கின்றன. பொழுதோ கோடையில் சிற ந்த ஓர் காலைப்பொழுது. வேளையோ விடி யலுற்று மூன்றே முக்கால் நாழிகையா கியிருக்கும். நிலவெளியிடையே மூன்று வழிப்போக்கர் சனகாபுரிபட்டணத்தை நோக்கிச் செல்லும் வழியே போகக் கா ண்கிறோம். அம்மூவரும் உயர்ந்து உடல் வன்மையும் வளப்பமும் பெற்றவராய்த் தோற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் இந்நாள்களில் பீகார் நாட்டிலுள்ள மக்க ளைக்காட்டிலும் உடலமைப்பில் வேறு பட்டவராய்க் காண்கிறார்கள். அவர்க ளுள் இருவர் அந்நாளைய வழக்கத்தோடு கூடிய வில் ஒரு கையிலும் முதுகில் அம் புகள் நிறைந்த கூடு தொங்கவும், இடை யில் உறைக்குளிட்ட ஓர் வாளும் உடை யவர்களாயிருக்கின்றார்கள். அவ்விருவ ரும் வீரர் இனம் என்றறிய ஓர் நோக்கே போதும். மூன்றாவது மனிதரோ சிறப் பில்லாத, ஒழுங்கான உடையாலும் ஆழ் ந்த ஊக்கத்தை யவாவிய முகத்தாலும் பேசும் தூய இனிய மொழிகளாலும் கற் றறிந்த அந்தணர் என்று எளிதில் அறி யக்கூடியதாயுளது, அவர் மித்திரர் எனப்பெயருடைய முனிவரே. சனகரது பொருப்பெல்லாம் ஏற்ற நன்னம்பிக் கைக் கிருப்பிடமான அமைச்சராகும். அடுத்த நகரில் சில ஏற்பாடுகளுக் காக மன்னரால் அனுப்பபட்டு வேணடு வன முடித்து, சனகபுரியிலுள்ள தம் இல்லம் நோக்கிச் செல்கின்றார். மற்றவீர ர்களது தொழில் முறைமையும் கடமை யும் நம் வரலாறு செல்லச் செல்ல மிகுதியும் அறிவோம். இப்போது அம்மூவருக்குள் நிகழும் பேச்சுகளைக் கேட்டறிவோம். ஓர் வீரன் முனிவரை நோக்கி வினவுகிறான் :—

"மேன்மைதங்கிய ஐயா, நான் காசி யிலிருந்து திரும்பி வந்தது முதல் தங் கள் முகத்தில என்றுமிலா ஓர் கலக்கக் குறி காண்கிறேன். இப்பொழுதுங்கூட நமது பேச்சுகளுக் கிடையில் தங்கள் உள்ளம் அலைவதாயும் அமைதியற்ற தாகவும் இருக்க உணர்கிறேன். எங்களி டத்தில் அதைப்பற்றி யறிவிக்க எந்தத் தடையு மில்லையானால் தாங்கள் எதனால் கலக்கத்தை யடைந்திருக்கிறீர்கள் என் பதை எங்களுக்கறிவிப்பதால் நாங்கள் நன்மை பெற்றவர்களாவோம்.

மித்திரர்:—யஞ்ஞதத்தா, உனக்கும் விட் ணுமித்திரனுக்கும் ஒளிக்கத்தக்கதா யொன்றுமில்லை. பெரியதோர் அவை கூடிய மறுநாளே என்னிடத்தில் கவலையுடைய தோற்றங் காண்பதாக வும் அது எதனால் நேர்ந்தது என்றும் விட்ணுமித்திரன் என்னை வினவினன். நாள்கழித்துச் சொல்வதாய்ச் சொன் னேன். பின்னையும் பொருத்தமான வேளை வாய்க்கவில்லை. இப்போதோ நீங்களிருவரும் இருக்கும் பொருத்த மான வேளை வாய்ந்திருக்கிறது. கலக்கம் நிகழாத இடமும் வேளையு மாயிருப்பதால் என் உள்ளத்திலிருப் பதை யுங்களுக்கு வெளிபபடுத்தியு ரைக்க எனக்குத் தடையேயில்லை.

யஞ்ஞதத்தன் :—எந்தப் பெரிய அவைக் கூட்டத்தைப்பற்றி யிப்போது குறிப் பிட்டீர்கள்? நான் இங்கிலலாததால், அதைப்பற்றி ஒன்றுமறிய முடிய வில்லை, நான் காசிக்குப் புறப்படும் நாளில் அரமனையில் ஓர் வேள்விக்கு ஆகவேண்டியவைகளுக்காக ஏற்பாடு நடந்து கொண்டிருந்தன. அந்தவேள் வியைச்சேர்ந்ததாய் ஏதாவது கூட்டம் கூடியதைப்பற்றிக் குறிப்பிடு கின்றீர் களா?

விட்ணுமித்திரன்:— நீ அந்தநாள் இங் கே இல்லாதது ஒரு அரிய வாய்

ப்பையிழக்கப்பெற்றாய். * அந்தக்கூட்டத்தைப்போல் இதுவரையில் எப்போதும் கண்டதுமில்லை நான் கேட்டுமறியேன்.

யக்ஞதத்தன்:— நமக்குத் தெரிந்தவர்களான கல்வியில் தேர்ந்த எவரெவர் பேசினார்?

விட்ணுமித்திரன்:— கல்வி யறிவுகளில் வல்லவரான எவரும் வாய்மூடி யிருக்கவில்லை. ஆனால் கார்க்கி யென்னும் மாதின் பேச்சும் அவளது கேள்விகளுக்கு விடைகளைப் பகர்ந்த யாக்ஞவல்கிய முனியின் பேச்சுகளுமே பெருமையுடையன. நினைவில் வைக்கக் கூடியன.

யக்ஞதத்தன் .—வழக்குக்கு எடுத்துக் கொண்ட பொருள யாது?

விட்ணுமித்திரன்:—இன்னதைப் பற்றி யென்று சுட்டி யெப்பொருளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அங்குக் கூடியிருந்தவர்கள் பலவேறு பொருள்களைக் குறித்துப் பலவேறு வினாக்களால் முனிவரைக் கேள்வி கேட்டார்கள். அக்கேள்விகள் மாரிநாள் பொழியும் விடா மழையை யொத்திருந்தன. அவ்வினாக்களுக்கு விடைகளைப் பகர்ந்த முனி பலபொருள்களைத் தழுவி விடை கூறலானார். கார்க்கியாம் பெண்மணி எங்கும் நிறைந்த செம்பொருளைப் பற்றியும் உத்தாலகமுனி எப் பொருளினுள்ளும் ஊடுருவிச்சென்றுள்ள ஓர் பொருளைக்குறித்தும் கேட்டார்கள். எனக்கு ஓய்வு காலமாய் வாய்க்கும் போது அக்கேள்விகளை விளக்கமாயும் அவற்றிற்கு யாக்ஞவல்கியர் அளித்த அறிய விடைகளைத் தெளிவாகவும் சொல்லுகிறேன். அந்த வாய்ப்பில் கடவுளைப்பற்றிய இயல்களை யம்முனிவர் விளக்கியது போல் நான் எப்போதும் எவராலும் கேட்டறியவில்லை.

யக்ஞதத்தர் :—எல்லோருஞ் சேர்ந்து அவரைக்கேள்வி கேட்கும்படி எதனால் நேர்ந்தது?

மித்திரர் :—அவர் முதலில் சற்று முன்னறிவின்றி நடந்து கொண்டார். அதுதான் பிறரால் வினாக்களால் தாக்கப் பெறுவதற்கு இடந்தந்தது. ஆனபோதிலும் அதன் முடிவு மிக்க நன்மையாயிருந்தது. நினைவில் வைக்கக்கூடிய அந்தப் பெருங் கூட்டத்தில் யாக்ஞவல்கியரது கல்வியும் உயிர்க்குரிய பயிற்சித் தேர்ச்சியும் விளங்கிக் காணப்பட்டதைப்போல் இனி யெந்த வாய்ப்பும் அப்படிப்பொருந்தாது. அவர் முப்பது வயதினராய இளையவரே. இளமையிலேயே அவரது அறிவின் ஒளி யிவ்வண்ண மிருந்தால் அவரது மூத்தவயதில் எவ்வளவு முதிர்ச்சியைப் பெறும்! அவர் விரும்பிய உரிமையை யிழக்கச்செய்வதற்காக அவ்வளவு தகைமை பெற்ற தன் மாணவரோடு வழக்கிட வைசம்பாயன முனியும் முனைந்தது பெருவியப்பைத்தருகிறது!

யக்ஞதத்தர் :—அது யாக்ஞவல்கியரை யெந்த வழியிலும் துன்புறுத்துமென்று நான் நினைக்கவில்லை. அதனால் நாம் எதையும் இழக்க நேராது. எவ்விழப்பையும் அடையச் செய்யாது. வைசம்பாயனரால் கற்பிக்கப் பட்ட மறையைக் கறுப்பு யசுர் மறையென யாக்ஞ வல்கியர் சரியாய்ப் பாகுபாடுபடுத்தினார். அவரது மாணவர்களில் சிலரிடத்தில் மறையைக் கேட்டறிந்திருக்கிறேன். முதனூலும் உரையும், மறை மொழியும் வழிபாடும் அதில் கலப்புற்று[illegible]கு கலங்கத்தக்கபடி ஓர் இருட்டறையுள் நுழைவதை யொத்திருக்கிறது. அப்படிப் பட்ட மறையானது கறுப்பு மறையென்று நன்றாய்ச்சொல்லப்படலாம்.

(தொடரும்)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,
2nd Asst., Corpn., School, Choolai. Madras

---

* அந்தமுனிவர் கற்றோர் குழாத்தில்நடந்த வழக்கு களைப்பற்றி பிரகதாரண்ய உபநிடதம் ங-ம் அத்தியாயத்தில் காண்க. தமிழில் ஆத்ம புராணம் பிரகதாரண்ய உபநிடதத்தைப் பற்றிய பாகத்தில் விரிவாய்அறியக்கிடக்கும்.

மாணவர் பக்கம்.

தொடக்கக் கல்வி

(௧௨௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

பண்டையர் வரலாற்று ஆட்டம்

இடக்கர் நீங்கியனவும் நன்மைகள் பெருந்தியனவு மாய பொருட் செறிவுற்ற சிந்துகளைக் காவடி சுமப்பவனாகக் கருதப்பட்டவன் காவடி வடிவொன்று அமைத்தாவது ஓர் தடியை தோளின்மீது சுமந்தாவது முதலில் பாடவும் அன்றி யவனும் அவனைச் சேர்ந்த நால்வரும் ஒருங்கு சேர்ந்து ஒரு குரலாய்ப் பாடவும் பின் அதையே வரிசையான மாணவர் கூறவும் இவ்வண்ணம் காவடி யேந்துபவனும் அவனைப்பின் தொடரும் நால்வருமாக வட்ட வடிவமான வரிசையைச் சுற்றி கூடு மாறால் கால்தட்டலோடு (தாளத்துக்கிசைய) நடந்து வரவும் வரிசையினர் பாடும் பாட்டுக்கிசைய கைதட்டல் (தாளம் போடல்) உடன் தொடர்ந்து பாடுதலுமாகக் கொண்டே ஆட்டயரச் செய்தல் சிறந்ததாம். நன்னெறி யினொழுகிய முன்னோர் வரலாறுகள் பொதியப்பெற்ற பாடல்களாக விருப்பின் மேலாம்; அன்றி, கடவுள் மாட்டு அன்புடைமை அருளிரத்தல் போற்றல் முதலிய கருத்துக்களடங்கி யிருப்பினும் நலமே. இராமனைப்பற்றிய வரலாற்றை இசைப்பாட்டாக்கி, சிறுவர் வட்டவடிவ வரிசை பெற்றுநிற்கவும் அவ்வரலாற்றுப் பாட்டை யொருவன் சொல்லப் பிறர் தொடர்ந்திசைக்க அப்பாட்டி லமைந்த கூத்தர் யார் யார் பேர்கள் சொல்லப் படுகின்றனவோ அவரவர்போல்சிலபிள்ளைகள் இடம்விட்டுப் பெயர்ந்து வட்ட வரிசையைச் சுற்றி யக்கூத்தர் தம் செயலைப் போல ஆடியபடியே சுற்றி வருதலும் அக்கூத்தரைப் பற்றியது முடிந்தவுடன் அவரது செயல் நடத்திய சிறுவர் அவர் தம் இடங்களில் சேர்ந்து நிற்கவும் பின்னர் பாட்டில் வரும் வேறுகூத்தர் செயலை, ஆடியவர் போக மற்றையோர் முறையாக ஏற்றுப்பாடியாடல் புரியவும் பாடல்களை ஒருவன் அன்றி யிருவர் மூவர் முதலில் சொல்ல மற்றையோர் பின் தொடர்ந்து பாடவும் அதற்கிசையக்கைதட்டல் புரியவு மாக ஆட்டயரச் செய்யலாம் இங்ஙனமே பலவரலாற்று ஆடல்களால் சிறுவர் சிறுமியர் நன்னெறி யறிந்து நல்லொழுக்கமுடையராதற்கு ஏற்ற முறையாக லின் எநத நன்னெறி வரலாற்றையும் பாட்டாக்கி அதற்கிசைவாக ஆடல் புரியச் செய்தல் தக்கதாம். ஆயின் பொய்ப்புனை (கதைகளை) புதுவலகளையும் விலங்கினங்களையும் பற்றிய வரலாறுகளினும் உயர்திணைக்குரியர் வரலாறுகளைக் கொண்டு ஆடலே சிறப்புடையதாம். ஞானசம்பந்தர், துருவன், மார்கண்டேயர், பிரகலாதன், ஞானதேவர், சிறுத்தொண்டர் முதலிய சிறுவரைப்பற்றிய வரலாறுகளையும் பிறவற்றையும் இசைந்தாற்போல் எடுத்தாளலாம். இவ்வகையின்றி இப்போதைய பள்ளிகளில் ஆடுபுலியாட்டம், தொப்பியாட்டம் கண்மூடியாட்டம் முதலியன ஆடப்படுகின்றன. அவை சிறுவர்களின் நல்லொழுக்கப்பயிற்சிக்கு ஏற்றவையல்ல வென வெண்ணி அவற்றை யிங்கு விரிக்காது விட்டனம்.

இதுகாறும் எழுத்துப்பயிற்சி முதலாக விளையாட்டூருக கற்பிக்கும் முறையைச்சொல்லிவந்தோம். கல்வியறிவே மிகுதியும் வேண்டுவ தொன்றாகலான் அவ்வறிவை விளைப்பதில் இன்னுஞ்சில குறிப்புகளைக் கொடுத்து இம்முதல் வகுப்பு ஓதுவிக்கும் முறையை முடிப்பாம்.

(தொடரும்)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,

2nd Asst. Corpn., School, Choolai, Madras.